148

ஜகன் மோகினி

செப்டம்பர் 1955 | JAGAN MOHINI | அணா நான்கு

ESTD. 1923

148 / 4.55

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 7 OCT 1955 MADRAS

கா. வே. ஸ்வாமி



ப்ர. அ. ஸ்வாமி

போடோ வை. மு. ஸ்ரீ.

"மஹான்கள் மோகினியை வாழ்த்துகிறார்கள்

"...வைத்தமாநிதியின் சார்பாக நடைபெறும் இந்த மோகினி தானும் வைத்தமாநிதியாக விளங்குகின்றது... இதனைப் பெற்றுக் கண்டு களிப்பவர்கள் மிக்க பாக்கியம் பெற்றவர்களென்பதில் ஐயமில்லை. இதில் வெளிவரும் கட்டுரைகளைப் படிப்போர் ஞான வளர்ச்சி பெற்று வருவதும் ஒவ்வொருவருடைய அநுபவத்திலறிந்ததாகும். மற்ற பத்திரிகைகளைக்காட்டிலும் இப்பத்திரிகையில் ஆவலுடையார்க்கு உலகில் பாராட்டு மிக மேம்பட்டதே யாகும்... **ப்ர. அண்ணங்கராசார்ய**

"...பகவான், 'தந்தம் காரியத்தைச் செய்து ச்ரேயஸ்ஸைப் பெறக்கடவன்' என்பதையே கீதையில் அருளிச் செய்திருக்கிறான்... இப்படி ஆசரிப்பதே தெய்வ பக்தியிலும் தேச பக்தியிலும் பர்யவஸிக்கும். ஆஸ்திக்யம் குறைந்து நாஸ்திக்யம் மேலிட்ட இக்காலத்தில் இவ்விஷயத்தை உலகத்தார் அறிந்து ஆசரிக்கும்படி செய்வதே மிகச் சிறந்த தொண்டாகும்... வைத்தமாநிதியார் ஜகன்மோகினியால் ப்ரபஞ்சம் முழுதும் க்ஷேமமடையச் செய்துவரும் இக் கைங்கர்யம் பரத்யக்ஷம்... கோதற்ற கலையமுதை ஊட்டுகிறார்கள்..." **—காரப்பங்காடு வேங்கடாசார்ய**

அரிய தமிழ் விருந்து

உதயசூரியன்

வை.மு.ஸ்ரீநிவாஸன், M.A.B.L
முதல் நவீனம் - ரூ. 1-4-0

1. மங்களபுரியில் மகிழ்ச்சி உதயம் 2. நாமகரணமும் நாற்பது திங்களும் 3. மங்களபுரியின் மூன்று திலகங்கள் 4. ஜீவியச்சுழலில் சோதனையின் கொடுமை 5. புயலும் அமைதியும் 6. குருகுல வாசமும் குமரனின் உள்ளமும் 7. ராஜ்யாபிஷேகமும் ராஜ்யபாரமும் 8. காதல் போதனை—கம்பன் வர்ணனை 9. எதிர்பாராத சம்பவம் 10. அதிர்ச்சியும் வைராக்யமும் 11, இதய ஒலி 12. போர்க்களத்தில் மனப்போர் 13. உணர்ச்சி வெள்ளம் 14. இருண்டவானம் 15. உதய சூரியன். [ஸ்ரீசுத்தானந்தரின் முகவுரையுடன்.]

மதமா, மனமா?

வை.மு.ஸ்ரீநிவாஸன், M.A.B.L
இரண்டாவது நவீனம் - ரூ. 1-4-0

1. சேற்றில் முளைத்த செந்தாமரை 2. அகமலர்ச்சியும் ஆபத்தும் 3. பரபரப்பும் பரிதவிப்பும் 4. வாழ்வும் தாழ்வும் 5. சோகமும் வேகமும் 6. இடியும் மின்னலும் 7. பிரசாரமும் விசாரமும் 8. அன்றும் இன்றும் 9. அலறலும் ஆறுதலும் 10. கண்கொள்ளாக் காட்சி 11. விளம்பரமும் விபரீதமும் 12. மனக்கண்ணாடியே உலகம் 13. இன்னலைப் புன்னகைப்போம் 14. உயிர் நிலை — உயர் நிலை 15. பொருள்—அருள்—அமைதி 16. மனதின் சூக்ஷமாணுக்கள் 17. அருள் நிலத்தில் அமரானந்தப் பயிர் 18. அவனியில் யாவும் அவனாலே 19. காதல் விளக்கம்—அன்பின் தாயகம் 20. மதமா, மனமா?—மனத்திருவிளையாடல்.

அவஸரமூர்த்தியின் அபூர்வ டயரி

வை.மு.ஸ்ரீநிவாஸன், M.A.B.L
மூன்றாவது சித்திரம் - ரூ. 1-8-0

1. நவீன ப்ரஹ்மதேவன் 2, நவீனங்களின் முன்னோர் 3. கடவுள் இருக்கிறார்! 4 பிரமித்துவிட்டோம்! 5. கீர்த்தனைமளி! 6. ஒரு வாரம் 7, ஸர்வம் ஸங்கீதமயம் 8. இந்திரனின புதல்வன் 9 ஸ்ரீ க்ருஷ்ணாம்ருதம் 10. கண்கொள்ளாக் காட்சி 11 அன்பின் ஆற்றல் 12. வாழ்வின் மேடு பள்ளங்கள் 13. எதிர்பாராத அநுபவம் 14 பொன் விழா 15 ஆறுதலும் கிளர்ச்சியும் 16 திருப்பதி யாத்திரை.

பகவத்விஷய ரஸாநுபவம்

காஞ்சீ மஹா வித்வான் ஸ்ரீ. உ. வே. ப்ரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசார்ய ஸ்வாமி

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

[திருவாய்மொழியில், ஸம்ஸாரிகளுக்கு ஹிதங்களை உபதேசிக்கத் தோன்றிய இரண்டாவது பதிகத்தில் பத்தாவது பாட்டு [எண்பெருக்கந்நலத்தென்பது] அஷ்டாக்ஷர மஹாமந்திரத்தின் பொருளைக் கொண்டதென்று கூறி விவரித்து வருகையில், ஓம் என்னும் பிரணவத்தின் பொருளை விவரித்து, அதற்கடுத்துள்ள (நம:) என்பதன் பொருள் விவரிக்கப்பட்டு வருகிறது.]

*

ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் பகவானுக்கு சேஷப்பட்டிருப்பதிற்காட்டிலும் பாகவதர்களுக்கு சேஷப்பட்டிருத்தல் மிகச் சிறந்ததாகக் குலாவப்படுகிறது. திருமங்கையாழ்வார் "மற்றுமோர் தெய்வமுளதென்றிருப்பாரோடுற்றிலேன், உற்றது முன்னடியார்க்கடிமை, மற்றெல்லாம் பேசிலும் நின் திருவெட்டெழுத்தும் கற்று நான், கண்ணபுரத்துறையம்மானே" [பெரிய திருமொழி 8-10-3] என்றருளிச் செய்துள்ள பாசுரத்தையே முக்கியமான பிரமாணமாகக்கொண்டு பாகவத சேஷத்வத்தைத் திருமந்திரத்திற்குத் தலையான பொருளாகக் கூறுவர் பேராசிரியர்கள். இதில் எந்த எழுத்தினால் (அல்லது) எந்த பதத்தினால் பாகவத சேஷத்வம் தெரிவிக்கப்படுகிறதென்று ஆராய வேண்டும். ஒன்றினாலும் தெரிவிக்கப்படவில்லையென்றே நினைக்கக் கூடியதாயிருக்கும். அப்படியில்லை. ப்ரணவத்தில் அகாரத்திலே இதை யநுஸந்திப்பாருளர். எங்ஙனேயென்னில்; அகாரத்தின்மேல் சதுர்த்தீ விபக்தி [நான்காம் வேற்றுமை] ஏறிக் கழிந்திருப்பதாக முன்னமே சொன்னோம். லுப்த சதுர்த்தியோடு கூடின அந்த அகாரத்தினால் பகவானுக்கு சேஷப்படுந்தன்மை தெரிவிக்கப்பட்டதன்றோ. பாகவத சேஷத்வமென்பது பகவத் சேஷத்வத்தின் எல்லை நிலமேயாதலால் அந்த அகாரத்திற்குப் பொருளுரைக்கும்போதே இதையும் சேர்த்துப் பொருளாக வுரைத்திடுவர்கள்.

வேறு சிலர், அந்த அகாரத்திற்கு அடுத்த உகாரத்திலேயும் பாகவத சேஷத்வத்தை யநுஸந்திப்பர்கள். எங்ஙனேயென்னில்; உகாரத்தினால் பகவானுக்குத் தவிர மற்றையோர்கட்கு சேஷப்பட்டவனல்லன் என்பது [அநந்யார்ஹத்வம்] தெரிவிக்கப்படுகிறதென்று முன்னமே சொன்னோம். பாகவதர்கள் பகவானுடைய திருவடிஸ்தானத்திலேயே சேர்ந்தவர்களாகையாலே உகாரத்தின் பொருளை அநுஸந்திக்கும்போதே இந்த பாகவத சேஷத்வத்தையும் சேர்த்து அநுஸந்திப்பர்களென்றதாயிற்று. ஆகவிப்படி

ப்ரணவத்திற்குள்ளேயே பாகவத சேஷத்வம் அநுஸந்திக்கத் தக்கதாயிருந்தாலும் இடையிலுள்ள (நம:) என்னும் பதத்திலே இதனை யநுஸந்திப்பது மிகவும் பொருத்தமானதென்று பேராசிரியர்களின் திருவுள்ளம். ஏனென்னில்; அஹங்காரமமகாரங்களை அறவே விட்டுத் தொலைத்தவர்களுக்கே பாகவத சேஷத்வம் ருசிக்கும். நமச்சப்தார்த்தம் ஊறவூற அஹங்காரமமகாரங்கள் அறவே நீங்குமாதலால் இங்ஙனம் நீங்கப்பெற்ற அதிகாரிகளுக்கே பாகவத சேஷத்வம் உறைத்திருக்குமென்றுகொண்டு நம் ஆசாரியர்கள் பாகவத சேஷத்வத்தை (நம:) என்பதிலே அநுஸந்திக்கும்படி நியமித்தருளினது மிகப்பொருத்தமானது.

பாகவத சேஷத்வம் என்பதன் உண்மை ஸ்வரூபத்தையறியாதார் பலர் இதில் ஆக்ஷேபங்களைச் செய்துகொண்டிருப்பர்கள்; பகவானுக்கே அடிமைப்பட்டிருக்கக் கடமைப்பட்டிருக்கின்ற நாம் வேறு சில வழிப்போக்கர்களுக்கு அடிமைப்படுகையாவது என்? ப்ரணவத்தில் உகாரத்தினால் உறுதி செய்யப்பட்ட அநந்யார்ஹ சேஷத்வத்தோடு முரண்பட்டதன்றோவிது; இதைத் திருமந்திரார்த்தமாகக்கொள்வது எப்படி சேரும்? என்று ஆக்ஷேபிப்பதுண்டு. அன்னவர்களைத் தெளிவிக்கிறோம். ஒரு வஸ்துவிலே நாம் அன்பு வைத்தால் அவ்வன்பு அந்தவொரு வஸ்துவோடு முடிந்து நிற்பதில்லை; அத்தோடு ஸாக்ஷாத் ஸம்பந்தமும் பரம்பரா ஸம்பந்தமும் பெற்ற வஸ்துக்களிலேயும் அன்பு பரந்து செல்லாநின்றது. மனைவியினிடத்திலே கணவன் வைக்கிற அன்பு அவளோடு ஸம்பந்த ஸம்பந்தம் பெற்றவர்களிடத்தும் பெருகிச் செல்வதை எங்கும் காண்கின்றோம். எம்பெருமானும் நம்மிடத்திலே வைக்கிற அன்பு நம்மளவிலே நிற்காமல் "கேசவன் தமர் கீழ்மேலெமரேழெழு பிறப்பும் மாசதிரிது பெற்று" என்று ஆழ்வாரருளிச்செய்கிறபடியே நம்மோடு உறவு பெற்றாரிடத்திலும் பெருகிச் செல்வதை இதிஹாஸ புராண கதைகளினாலறிகிறோம். இவ்விதமாகவே நம்முடைய அன்பும் எம்பெருமானளவிலே சுவறிப் போகாமல் அடியாரடியார் தம்மடியாரடியார் தமக்கடியாரடியார் பக்கலிலும் பெருகிச் சென்றால் இது பகவத் பக்தியின் உறைப்பேயொழிய வேறன்று. ஆக பாகவத பக்தியென்பது பகவத் பக்தியின் ஒரு காஷ்டையேயொழிய வேறுபட்டதன்று என்றதாயிற்று. இதில் செய்யும் ஆக்ஷேபங்கள் இதன் உண்மையையுணராதார் செய்யுமவை யத்தனையென்று விடுக்க.

இனி, (நம:) என்பதற்கு அடுத்ததான நாராயண பதத்திற்குப் பொருள் விவரிக்கப்படுகிறது. நார-அயந என்று இரண்டு பதங்கள் சேர்ந்து நாராயண என்றாகிறது. நாரங்களுக்கு அயநமாயிருப்பவன் நாராயணன். நித்ய வஸ்துக்களின் திரள்களுக்கு ஆதாரமாயிருப்பவனென்றபடி. நாராயணன் நித்யவஸ்துக்களுக்கு ஆதாரமாயிருந்தால் அநித்ய வஸ்துக்களுக்கு ஆதாரமாயிருப்பவன் யாவன்? என்று கேள்வி பிறக்கும்; கேண்மின்: வேதாந்த ஸித்தாந்தத்தில் அநித்ய வஸ்துவே கிடையாது; எல்லாம் நித்ய வஸ்துக்களேயாகும். அழிந்தொழியும் பொருள்களை நாம கட்

183194

கூடாகக் காணுநிற்க, அநித்ய வஸ்துவே இடையாதென்றால் எப்படி பொருந்துமென்று கேள்வி பிறக்கும். இங்குத் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயமாவது, நித்ய வஸ்துக்கள் இருவகைப்படும்; ஸ்வரூப நித்யமென்றும் ப்ரவாஹ நித்யமென்றும்; எப்போதும் எவ்விதத்தாலும் அழிவில்லாத பொருள்கள் ஸ்வரூப நித்யமெனப்படும். ஆன்மா, மூலப்ராக்ருதி, காலம் முதலானவை இந்த வகுப்பிற் சேர்ந்தவை. இனி ப்ரவாஹ நித்ய வஸ்துக்கள் எவையென்னில்; உற்பத்தியையும் விநாசத்தையுமுடையனவாயிருக்கச்செய்தேயும் முன்னிருந்த நாமம் உருவம் லிங்கம் முதலானவற்றில் மாறுபாடின்றிக்கே யிருக்கப்பெற்ற பொருள்கள் ப்ரவாஹ நித்யங்களெனப்படும். பஞ்சபூதங்களின் விகாரப்பொருள்களாக உலகிற் காணப்படுகின்ற செடி கொடி மரம் பானை துணி முதலான ஸகல வஸ்துக்களும் ப்ரவாஹ நித்யங்களாம். ஒரு பானை உடைந்து போனாலும் அதேவிதமான பல பானைகளை எஞ்ஞான்றும் காணுநின்றோம்; ஒரு துணி கிழிந்து போனாலும் அதேவிதமான பல துணிகளை எந்நாளும் பார்க்கின்றோம். இங்ஙனே ஒவ்வொரு பொருளின் விஷயத்திலும் கண்டுகொள்ளலாம்.

அன்றியும், வேதாந்திகளின் மதத்தில் ஒரு வஸ்துவுக்கும் புதிதாக உற்பத்தியும் அழிவும் ஒப்புக்கொள்ளப்படவில்லை; ஒரு அவஸ்தையிலிருந்து மற்றோரவஸ்தைக்கு மாறுவதே உற்பத்தியாகும், அந்த நிலைமையினின்று மற்றோர் நிலைமைக்கு வருவதே விநாசமாகும்; ஆக ஸூக்ஷ்மாவஸ்தைக்கும் ஸ்தூலாவஸ்தைக்கும் மாறி மாறி வருவதே உத்பத்தி விநாசங்களாகையாலே இந்த வகையில் எல்லாப்பொருள்களையும் நித்யங்களென்று கொள்ளக்குறையில்லை, நாராயணனென்பதற்குப் பொருளருளிச்செய்யா நின்ற பிள்ளைலோகாசார்யர் முமுக்ஷுப்படியில்— "நாராயணனென்றது—நாரங்களுக்கு அயநமென்றபடி; நாரங்களாவன நித்யவஸ்துக்களினுடைய திரள்" என்று பணித்து உடனே அந்த நித்யவஸ்துக்களை விவரிக்கத்தொடங்கி, "அவையாவன — ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகளும் ... பெரியபிராட்டியார் தொடக்கமான நாச்சிமார்களும் நித்யஸூரிகளும்...ப்ரக்ருதியும் பத்தாத்மாக்களும்... அண்டங்களும் அண்டத்துக்குட்பட்ட தேவாதி பதார்த்தங்களும்" என்று அருளிச்செய்தார். இதனால் விண்ணுலகிலும் மண்ணுலகிலும் ஒரு பொருளையும் விடாமல் எல்லாமும்நாரமென்னுஞ் சொல்லுக்குப்பொருளாகச் சொல்லிற்றாயிற்று. இப்பொருள்களுக்கெல்லாம் ஆதாரமாயிருப்பவன் நாராயணன்.

பகவான் இப்பொருள்களிலேயிருக்கின்றானா? அல்லது இப்பொருள்கள் பகவானிடத்து இருக்கின்றனவா? என்று பார்க்குமளவில், இரண்டு வகைக்கும் குறையில்லையென்றே நூற்கள் கூறுகின்றன. எல்லாப் பொருள்களிலும் பகவானுளன்; எல்லாப் பொருள்களும் பகவானிடத்து உள்ளன என்பதே நூற்கொள்கை. பகவானிடத்துள்ள பரத்வம் ஸௌலப்யம் என்கிற இரண்டு திருக்குணங்களும் மேற்கூறிய இருவகைப் பொருள்களினாலும் விளக்கம்

பெற்றனவாகும். எங்ஙனே யென்னில்; எல்லாப் பொருள்களும் பகவானிடத்தேயுள்ளன என்னும்போது எல்லாப் பொருள்களுக்கும் தான் ஆதாரமாயிருக்கையாகிற பரத்துவம் விளங்கிற்றும். எல்லாப் பொருள்களிலும் பகவானுளன் என்னும்போது அறப் பெரியனுன தான் ஸகல சேதநா சேதநங்களிலும் தன்னை அமைத்துக்கொண்டு புகுந்திருக்கையாகிற ஸௌலப்யம் [எளிமை] விளங்கிற்றுகும். ஆக நாராயண பதத்தின் பொருள் விவரிக்கப் பட்டதாயிற்று.

இனி நாராயண பதத்தின் மேலுள்ள நான்காம் வேற்றுமையின் பொருளாவது, கைங்கர்ய ப்ரார்த்தனை யென்பர். அதாவது, நாராயணனுக்கே எல்லா வடிமைகளும் செய்யப் பெறுவேனுக வேணும் என்றுகோரப்படுகிறதென்கை. எவ்விதமான கைங்கரியம் செய்யவேணும்? அது எப்போது செய்ய வேணும்? என்கிற கேள்விக்கு இடமில்லை; ஸகல தேசங்களிலும் ஸகலகாலங்களிலும் ஸகலாவஸ்தைகளிலும் ஸகலவிதமான கைங்கரியங்களையும் செய்வதற்கே இட்டுப் பிறந்தோம் நாம். இதனை நம்மாழ்வார் "ஒழிவில்கால மெல்லா முடனுய் மன்னி வழுவிலா வடிமை செய்ய வேண்டு நாம்" என்கிற பாசுரத்தினல் தெளிவித்துள்ளார்.

கைங்கரியம் செய்வது மனமொழிமெய்களாலும் பொருளாலுமாகக் கூடியது. இவற்றுள் மனத்தினுலும் வாக்கினுலும் கைங்கரியம் செய்வதில் அருமையில்லை. உடலைச் சிரமப்படுத்தி அடிமை செய்வது அரிது. அதுதான் முக்கியமானது. பொருளைச் செலவு செய்து கைங்கரியம் செய்வதுதான் மிகச் சிறந்ததென்று சிலர் நினைக்கக் கூடும். அது மிகத் தாழ்ந்த தென்பதை நிரூபிக்கிறேம் காண்மின்; ஒருவன் தவறு செய்து ராஜ தண்டனைக்கு உட்படுகிருன்; அரசன், ஒரு மாதம் கடுங்காவல், அல்லது ஆயிரம் ரூபாய் அபராதம் என்று விதித்தால் எப்படிப்பட்ட ஏழையும் சிரமப்பட்டாகிலும் பணத்தைச் செலுத்தப் பார்க்கிருனே யொழிய, தேஹத்தை நலிவுறுத்தக்கூசி சிறைவாஸத்திற்கு உடன்படுவதில்லை. இதனல் அனைவர்க்கும் தேஹத்திலேதான் அதிகமான அன்பு என்றும், பொருளில் அவ்வளவு அன்பு கிடையாதென்றும் கண்டு கொள்ளுகிறேமல்லவா? நாம் எதை அதிகமாக அபிமானிக்கிறேமோ அதைச் சிரமப்படுத்திச் செய்யும் கைங்கரியமே சிறந்ததாகுமென்பதில் தட்டில்லை. ஆகவே, திரவியத்தைக் கொண்டு செய்யும் பணிவிடையிற் காட்டிலும் உடலைக்கொண்டு செய்யும் பணிவிடையே சிறியதென்று தேறுகின்றது கோவில்களில் எம்பெருமானுக்குத் திருத்தேர்த் திருவிழா நடைபெறுகின்றது; திருத் தேரை யிழுக்க வாருங்கள் என்றழைத்தால், பத்தெட்டு ரூபாயைக் கொடுத்துக் கைகூப்பி நிற்கும் அதிகாரிகளே மலிந்துள்ளார்கள். உடலைச் சிரமப்படுத்திக் கைங்கரியம் செய்வோமென்று குதுகலிப்பவர்கள் மிகச் சிலரே. அத்தகைய கைங்கரியமே எம்பெருமானுக்குப் பரம ப்ரீதியை விளைக்கும்.

இங்கு ஒன்று கேட்கலாம்; ஒருவற்குப் பணிவிடை செய்வதென்பது உலகில் இலேசமாகக் காணப்படுகிறதே யொழிய ஆனந்தமாகக் காணப்படவில்லை. "ஸேவா ச்வ வ்ருத்திராக்யாதா தஸ்மாத் தாம் பரிவர்ஜயேத்" என்று மநுமஹர்ஷியும் கூறியுள்ளார்; இதன் பொருளாவது, பணிவிடை செய்வதென்பது நாய்த்தொழிலாதலால் அதனை விட்டுவிட வேண்டும் என்பதாம். ஆனந்தமயனான ஆன்மா ஆனந்த ஹேதுவான செயல்களைச் செய்து ஆனந்தப்பட வேண்டியிருக்க, இலேசத்திற்கே ஹேதுவான பணிவிடையைச் செய்து வருந்தலாமோ வென்று. இதற்கு ஸமாதானம் கேண்மின்; உலகிற் பணிவிடைகள் இரண்டு வகையாக வுண்டு. தேஹ போஷணத்திற்காகப் பணிவிடை செய்வது ஒன்று; ஆத்மானந்தத்திற்காகப் பணிவிடை செய்வது மற்றொன்று.

இவற்றுள் முந்தின பணிவிடையினால் இலேசம் விளையுமே யல்லது பிந்தின பணிவிடையினால் சிறிதும் இலேசம் விளையாது; பரமானந்தமே கொந்தளிக்கும். சிஷ்யன் ஆசார்யனுக்குச் செய்யும் பணிவிடைகளையும், காமுகன் காமினிக்குச் செய்யும் பணிவிடைகளையும் பார்க்கிறோம். இவை வெகு மகிழ்ச்சியுடன் நடைபெறுகின்றன வென்பதை உலகிற் காண்கிறோம்.

துஷ்யந்த மஹாராஜன் வேட்டையாடிக்கொண்டு செல்லும்போது ஒரு மஹர்ஷியின் ஆச்ரமத்தில் இளைப்பாறப் புகுந்தான்; அங்கே சகுந்தலை யென்னும் தெய்வமாதைக் கண்டு காதல் கொண்டான்; அவளோடு சம்பாஷிக்கவும் பெற்றான்; அப்போது சொல்லுகிறான்;— "ஸம்விஜயாமி நளினீதள தாளவ்ருந்தை:, அங்கே நிதாய கரபோரு! யதாஸுகம் தே ஸம்வாஹயாமிசரணாவுத பத்மதாம்ரௌ" என்கிறான்; சகுந்தலையின் முகத்தில் வேர்வை நீர் பெருகுவதைக் கண்டு அரசன் பொறுக்கமாட்டிற்றிலன்; தாமரையிலையை விசிறியாகக் கொண்டு விசிறட்டுமா? உன்னுடைய பாதபல்லவங்களை மடியிலே ஏறிட்டுக்கொண்டு நோவு தீர வருடட்டுமா? என்று கேட்கிறான்; கேட்டுக் கொண்டே அப்பணிவிடைகளையும் செய்கிறான். இவனோ சக்ரவர்த்தி; அவளோ ஒரு காட்டுப் பெண். காதல் விளைந்ததே காரணமாகக் கைங்கர்யம் செய்வதில் அன்பு ததும்பிய குதூஹலம் விளைகின்றது. இதனால் என்ன தெரிந்து கொள்ளுகிறோம்; உகப்பில்லாதவிடத்தில் செய்ய நேரும் பணிவிடையே துக்க ரூபமானதென்றும், உகப்புள்ளவிடத்தே செய்ய ப்ராப்தமாகும் கைங்கரியமானது ஆனந்தமயமாகவே யிருக்குமென்றும் தெரிந்து கொள்ளுகிறோம்.

ஆகவே எம்பெருமானிடத்தில் ஸ்வரூபத்தாலும் திருக்குணங்களடியாகவும் உகப்புக் கொண்டவர்களுக்கு கைங்கர்யம் ருசித்திருக்குமே யொழிய க்லேச ரூபமென்று வெறுக்கத் தக்கதாயிராதென்று தெரிந்து கொள்ளுகிறோம். இவ்விஷயத்தைப் பிள்ளைலோகாசார்யர் எவ்வளவு அழகாகத் தெரிவித்தருளுகிறார் பாரும்

கள்—"சேஷத்வம் துக்க ரூபமாகவன்றோ நாட்டில் காண்கிறதென்னில்; அந்நியமமில்லை; உகந்த விஷயத்துக்கு சேஷமாயிருக்குமிருப்பு ஸுகமாகக் காண்கையாலே" என்பது அவ்வாசார்ய சிகாமணியின் திவ்ய ஸூக்தி. வேதார்த்தஸங்க்ரஹமென்னும் நூலின் முடிவில்ஸ்வாமி ராமாநுஜர்தாமும் அருளிச்செய்த அர்த்தமிது. கைங்கர்யப்ரார்த்தனை செய்வது ஸ்வரூபாநுரூபமேயாதலால் * நாராயணாயவென்பதனால் அது செய்யப்படுவதில்குறையொன்றுமில்லையெனக. ஆக இவ்வளவாலும் திருமந்திரப்பொருள்விளக்கப்பட்டதாயிற்று. இப்பொருள்களையெல்லாம் * எண்பெருக்கந்நலத்தென்னுமிப்பாசுரத்திலே சிந்தனை செய்யவேணுமென்பது பூருவாசாரியர்களின் திருவுள்ளம்.

பாட்டின் கருத்தாவது, எண்ணிக்கை பெருகிக்கொண்டேயிருக்கும்படி அளவிறந்த, ஞானம் முதலிய குணங்களையுடைய சிறந்த பொருளாகிய ஜீவாத்மவர்க்கத்தையும் முடிவில்லாத திருக்கலியாண குணங்களையுமுடையனான நாராயணனுடைய திருவடிகளை யாச்ரயிப்பது என்பதாம். பிரணவத்தையும் நமஸ்ஸையும் நான்காம் வேற்றுமையும் கூட்டினால்தான் திருவஷ்டாக்ஷரமஹாமந்த்ரமாகும். இப்பாட்டில் அவற்றின் ப்ரஸ்தாவம் இல்லாதிருந்தாலும் ஆழ்வாருடைய திருவுள்ளக் கருத்தை ஆழ்ந்துணர்ந்த ஆசாரியர்கள் தெரிவித்த கட்டளை இது.

பாசுரத்தில் 'திண்கழல்' என்றது குறிக்கொள்ளத் தக்கது. எம்பெருமானது திருவடிகளுக்குத் திண்மையாவது என்னென்னில்; அடியவர்களை ஒருபோதும் கைவிடாதிருத்தலேயாம். "பிராட்டியும் அவனும் விடிலும் திருவடிகள் விடாது, * திண்கழலாயிருக்கும்" என்பது பிள்ளை லோகாசார்யருடைய திவ்யஸூக்தி. புருஷகாரம்செய்வதையே தொழிலாகவுடையளான பிராட்டி கைவிட்டாலும், "என்னடியார் அது செய்யார் செய்தாரேல் நன்று செய்தார்" என்று பரிந்து நோக்குகிற எம்பெருமான் தானும் கைவிட்டாலும் திருவடியானது தன்னுடைய வைலக்ஷண்யத்தாலே துவக்கிக்கொள்ளுகையாலே கைவிடாதென்றவாறு. அப்படிப்பட்ட திருவடிகளில் கைங்கர்யமே செய்யத் தக்கதென்றபடி.

பதினோரும் பாட்டு.

11. சேர்த்தடத்தென்குருகூர்ச்சடகோபன் சொல்
சீர்த்தொடையாயிரத்து ஓர்த்தவிப்பத்தே.

இப்பதிகம் கற்றார்க்குப் பலனுரைத்துத் தலைக்கட்டும் பாசுரமிது. ஆனால் இப்பாட்டில் ஒருபலனும் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை; ஆயிரத்து ஓர்த்தவிப்பத்தே" என்று முடித்திருக்கின்றது. அடியார்களின் ஹிதத்தை யாராய்ந்து கூறப்பட்டது இப்பதிகம் என்றபடி. எனவே இப்பதிகம் பயின்றார்க்கு ஹிதமானவை கைகூடும் என்று பயனுரைத்ததாகத் தேறும்.

சடகோபன் சொன்னவாயிரமென்றால் போதுமாயிருக்க, 'தென் குருகூர்ச் சடகோபன்' என்றது, திருக்குருகூரில் அவதரித்ததனால் ஆழ்வார்க்குண்டான சிறப்பு விளங்குதற்காம். *நல்லார் நவில் குருகூரென்று முதற் பிரபந்தத்திலேயே திருக்குருகூரின் பெருமையை விளக்கியுள்ளாராழ்வார். "சேர்த்தடத்தென் குருகூர்" என்றவிடத்து நம்பிள்ளை யீட்டில் "சேர்த்தடமென்கிறவித்தைச் சேர்தடமாக்கி" என்கிற வாக்கியமுள்ளது. (சேர்த் தடம்) என்றவிடத்துத் தகரவொற்று இருக்க அவசியமில்லை; இலக்கணப்படிக்குச் சேர்தடமென்று இயல்பாகவே யிருக்கவேண்டும்; வினைத்தொகையாதலால்; ஆழ்கடல், சூழ்திரை என்னுமிடங்களிற்போல. ஆயிலும் மேல் மூன்றடிகளிலும் இதே ஸ்தானத்தில் வல்லொற்று மிக்கிருப்பதனால் அதற்கிணங்க முதலடியிலும் அது மிக்கது. சொற்செறிவு அங்ஙனமிருந்தாலும் பொருட்சேர்த்திக்கு ஏற்பத்தகரவொற்று இன்றியே [சேர்தடமென்றே] கொள்ளவேணுமென்றபடி. பொய்கைகளோடு பொய்கைகள் சேர்ந்திருக்குமபடியான திருக்குருகூர் என்கை. இதனால் திருநகரியின் நீர்வளம் சொல்லிற்றாகிறது. வரிசையாகப் பொய்கைகளே எங்கும் நிறைந்திருக்குமெனக. 'தடம் சேர் தென் குருகூர்' என்று இயைத்து, பொய்கைகளோடு கூடியிருக்கின்ற திருநகரியென்னவுமாம். ஆக இப்படிப்பட்ட திருநகரியில் அவதரித்தருளின ஆழ்வார் அருளிச்செய்ததென்கை.

சீர்த்தொடையாயிரத்து=கவியுறுப்பான சீரும் தொடையும் நிரம்பினவாயிரமென்க. அன்றியே, சீர் என்று எம்பெருமானுடைய திருக்குணங்களைச் சொல்லிற்றாகி, பகவத் குணங்களைத் தொடுத்து அமைக்கப்பட்ட ஆயிரத்திலே, இப்பத்து ஓர்த்த—சேதநருடைய ஹிதத்தை மிகவுமாராய்ந்து சொன்னது இப்பதிகம்.

(தொடரும்)

அபூர்வ ராமாயணம்

ஸ்ரீப்ர. ப. அ. ஸ்வாமியின்

அபூர்வ க்ரந்த ரத்னம்

160 பக்கங்கள் ரூ. 1—8.

" இவரொருவரால்தான் இத்தகைய முறையில் எழுதமுடியும்" என்று பிரஸித்த அறிஞர்களால் போற்றப்பட்டது.

மகாத்மாவின் பால சிஷ்யன்

ஜயலக்ஷ்மி ஸ்ரீனிவாசன்

பள்ளிக்கூடத்துக்குப் போகும் வழி; ஏழைப் பிச்சைக்காரன் ஒருவன் மகாத்மா காந்தி அடிகளின் அன்புக்குப் பாத்திரமான பாடல் 'வைஷ்ணவஜனதோ'வை மிக உருக்கமாகப் பாடிக் கொண்டு உட்கார்ந்திருந்தான். பள்ளிக்கூடம் போய்க்கொண்டிருந்த சிறுவனின் மனம் உருகிற்று. தன் சட்டைப் பையிலிருந்த அரையணு நாணயம் ஒன்றை எடுத்து அந்தக் குருடனின் தட்டத்தில் போட்டான் குழந்தை. எட்டு வயதுப் பையன்; பெயர் ரவி. ரவி ரொம்ப சமர்த்து; ஏழை எளியவர்களைக் கண்டால் அவன் உள்ளம் வெண்ணெய்போல் உருகிவிடும். தன்னிடம் என்ன இருந்தாலும், அதை உடனே தானம் செய்து விடுவான். அதுவே அவனுடைய தமையன் இருக்கிறனே கோபால் அவ்வளவுக்கவ்வளவு கஞ்சன். "டேய் ரவி! சுத்த மடையன்டா நீ! அம்மாவை நச்சரித்து, தினமும் வேர்க்கடலைக்கென்று ஓரணு வாங்கிக் கொள்கிறேன். அம்மா எனக்குக் கொடுக்கறச்சே "போகட்டும் பாவம்" என்று உனக்கும் கொடுத்தால், அதை நீ குருடனுக்கும், நொண்டிக்கும் கொடுக்கிறயா! இரு, இரு! அம்மாவிடம் சொல்கிறேன். இனிமேல் உனக்குக் காசே கொடுக்க வேண்டாம்னு' என்று கோபால் ரவியை பயமுறுத்துவான்.

ரவி அமரிக்கையாக "இன்னிக்கு நம்மவீட்டு வாத்தியார் என்ன சொன்னர் அண்ணு? ஏழைகளுக்கும், மற்ற பெயருக்கும் தன் கையாலான உதவி செய்பவனே நல்ல பையன்" என்றரே. ஸ்கூலில் Scout teacher கூடத்தான் "ஒவ்வொரு நாளும் தன் கையாலான உதவியை மற்றவாளுக்குச் செய்பவன்தான Scout எனப்படுவான்" என்றரே என்பான.

கோபால் அதற்கு "போடா பைத்தியக்காரா; நம்பள் அப்பா கஷ்டப்பட்டு; சம்பாதிப்பதை நீ இப்படி கண்டபடி செலவழிக்கிறயே; வேர்க்கடலை, பெப்பர்மென்ட், சாகலேட், என்று ஏதாவது வாங்கித் தின்னப்படாதோ" என்பான்.

ரவி "தானம் செய்வது கண்டபடி செலவழிப்பதாகுமா? வீட்டுக்கு போன உடனேதான் அம்மா வேண்டிய அளவு சாப்பிடத்தராளே, இந்தக் காசை தானம் செய்தால் அப்பா, அம்மாவுக்கும்கூட புண்ணியம் உண்டே".

அண்ணு தம்பியின் நடுவில் இவ்வித வாக்குவாதம் நடக்காத நாளே இடையாது. கடைசியில் கோபாலின் பயமுறுததலுக்கு அஞ்சினவனய், தன் தமையன் பெற்றேர்களிடம் கோள சொல்லாமல் இருபபதற்காக ரவி தன்னிடமுள்ள சாக்கட்டியையோ பலபத்தையோ, பென்ஸிலையோ, கோலியையோ கோபாலுக்கு லஞ்சம கொடுகக நேரிடும.

* * *

அன்று சீதாலக்ஷ்மிக்கு ஏனோ ரொம்ப கோபம். இரண்டு நாளாய் முனியம்மாள் ஏனோ வேலைக்கு வரக்காணோம். வீட்டுக் காரியம் முழுவதும் சீதாலக்ஷ்மியின் தலைமேல் விழுந்தால் கோபம் வராதா என்ன?

முனியம்மாள் தான் என்ன செய்வாள் பாவம்; அவளுடைய கணவனுக்குப் பத்து நாட்களாக ரொம்ப ஜுரம்; அதுவும், இந்த இரண்டு நாளாக ஜுரம் ரொம்ப அதிகம் காய்வதால் அவளால் கணவன் படுக்கை அருகிலிருந்து நகரவே முடியவில்லை. நிலைமை இப்படி இருக்கும்பொழுது அவள் எப்படி வேலைக்கு வரமுடியும்? மாதம் பிறந்து நான்கு நாளாகி விட்டது. சீதாலக்ஷ்மியின் வீட்டுக்குவந்து தன்சம்பளத்தை வாங்கிக்கொண்டு போவதற்குக் கூட முனியம்மாவால் முடியவில்லை. அவளுடைய பிள்ளை முருகன் தான் டாக்டர் வீட்டுக்கு அலைந்துகொண்டிருந்தான். இதன் நடுவில் முருகன் பள்ளிக்கூட சம்பளம் கட்டவேண்டிய நாள் மீறி விட்டது. ஐந்தாம் தேதிக்குள் பீஸ்-ப்பணம் கட்டாவிட்டால் எட்டணா அபராதப் பணம் செலுத்த வேண்டும். தங்கநெல்லூர் பள்ளிக்கூட தலைமை வாத்தியார் மகாபொல்லாதவன் என்று உலகப் பிரசித்தமாயிற்றே! தான் ஏழைப் பையன் என்று புலம்பி உபகாரச் சம்பளம் பெறுவதற்காக எவ்வளவு தடவைகள் விண்ணப்பம் செய்துக் கொண்டும், மேலிருந்து பதில் கிடைத்தால் தானே. முருகன் என்ன செய்வான் பாவம்! பள்ளிக்கூடச்சம்பளப் பணத்துக்காகத் தன் தாயாரை நச்சரிக்க வாரம்பித்தான். முனியம்மாள் முருகனையே போய் தன் சம்பளத்தைக் கேட்டு வாங்கி வரும்படி சீதாலக்ஷ்மியிடம் அனுப்பினாள்.

முருகன் நடுங்கிக்கொண்டே வந்து சீதாலக்ஷ்மியின் வீட்டு வாசற்படியருகில் வந்து நின்றான். அங்கே, அவனுடைய பள்ளிக்கூடக் கூட்டாளியும், அவனுடைய தமையன் கோபாலும் கோலி விளையாடிக் கொண்டிருப்பதை கொஞ்சநாழிகை சுவாரஸ்ய மாகப் பார்த்துக் கொண்டு நின்றான். அவனுடைய (Classmate) பள்ளித்தோழன் வேறு யாருமில்லை, ரவிதான். விளையாட்டு சுவாரஸ்யத்தில் முருகன் தான் வந்த காரியத்தை மறந்தே விட்டான் போலும்! திடீரென்று நினைத்துகொண்டான். ரவியின் தாயாரைப் பார்த்துப் பேச வேண்டும் என்றாலே முருகனுக்கு திகில்தான், மேலும், முனியம்மாள் இரண்டு நாளாக வேலைக்கும் வரவில்லையா... அதனால் இப்போதுதான் மாத்திரம் வந்து ரவியின் தாயாரிடம் எப்படியடா பேச்சு கொடுப்பது என்று திகில்பட்டான் சிறுவன். அதுவும் முனியம்மாளின் சம்பளத்தைக் கொடு என்று கேட்டால், சீதாலக்ஷ்மி பத்திரகாளி சொரூபமெடுப்பாள் என்று முருகனுக்குத் தெரியாதா என்ன? ஆதலால், இந்த விஷயத்தை மெதுவாக ரவியின் காதில் ஊதினான்.

ரவி, முருகனின் கஷ்டங்களை அறிந்து உள்ளம் உருகியவனாய் தன் தாயாரை சமீபித்து, மெதுவாக 'அம்மா! அம்மா! முனியம்மாளின் பிள்ளை முருகன் வந்திருக்கிறான், அவனுடைய

அப்பாவுக்கு ரொம்ப ஜுரமாம், அதான் முனியம்மா வேலைக்கு வரமுடியவில்லையாம். ஜுரம் கொஞ்சம் இறங்கினதும் வருகிருளாம்'' என்று முணுமுணுத்தான்.

சீதம்மாள் முகத்தைச் சுளித்துக்கொண்டு, அவள் வருகிருள், வருகிருள் என்று யார் காத்திருப்பதாம்? நான் வேருெரு வேலைக்காரியைப் பேசிவைத்து விடுகிறேன். அவள் இனி நம்ம வீட்டு வாசல்படியை மிதிக்கக் கூடாது என்று சொல்லி அனுப்பு என்று இறைந்தாள்.

"இல்லையம்மா, வந்தூ...வந்தூ...அவள் என்ன செய்வாள் பாவம்! மருந்து வாங்கக்கூட காசில்லையாம். முருகன் இன்னிக்கு ஸ்கூல்பீஸ் கட்டாவிட்டால் எட்டணு Fine போடுவார்கள். பாவம், பரம ஏழை அவனிடம் அவன் அம்மாவின் சம்பளத்தைக்கொடுத்து அனுப்பும்மா'' என்று முருகனுக்குப் பரிந்து பேசினான் ரவி.

"ஊரில் உண்டான இழவெல்லாம் கட்டிண்டு உனக்கென்ன ஆகணும்டா ரவி? சும்மா வாயை மூடிண்டுபோ. அந்தக் கழுதைக்கு ஒரு தம்படிகூட கொடுக்கமாட்டேன்; துரத்துடா அவனை'' என்று கூப்பாடு போட்டாள் சீதாலக்ஷ்மி.

"அம்மா! அம்மா! ஏழைகளை அலக்ஷியம் செய்தால் காந்தி தாத்தாவுக்கும் பிடிக்காது; சுவாமிக்கும் பிடிக்காது. பாவம் முருகனிடம்முனியம்மாளின் சம்பளத்தைக் கொடுத்துஅனுப்புமா ஐந்தே ஐந்து ரூபாய்தானே........'' என்று மறுபடியும் தயங்கித் தயங்கி பகர்ந்தான் ரவி.

ரவியின் பேச்சு அவனுடைய தாயாருக்கு ஒரு லக்ஷியமா முருகன் கால் கடுக்க நின்றதுதான் லாபம். முருகனின் கஷ்டத்தைக் கண்டு ரவியின் இளம் உள்ளம் பரிதவித்தது. ஆனுல்......ஆனுல், அவன் என்ன செய்ய முடியும்? அவனிடம் பணம் இருந்திருந்தால் ஐந்தில்லை.........ஐனூறு ரூபாய்களை முருகனுக்கு கொடுத்துவிட்டிருப்பான். ஆனுல், ரவியிடம் அப்பொழுது இருந்தது, நான்குக் கண்ணுடி கோலிகளும் இரண்டு பென்ஸில்களும்தான் (கொடுக்கக் கூடியவை) அவைகளையே முருகனுக்குக் கொடுத்து, சமாதானம் செய்து அனுப்பினுன்.

⁂ ⁂ ⁂

பகல், பள்ளிக்கூடம் துவங்கியதும் வாத்தியார் மாணவர்களிடம் பள்ளிக்கூட சம்பளத்தை வசூல் செய்துக் கொண்டிருந்தார்; அநேகமாக எல்லோருமே'பீஸ்'கொடுத்து விட்டார்கள் கொண்டு வராத இரண்டொரு பையன்களும் மறுநாள் எட்டணு தண்டப் பணத்துடன் கட்டாயம் 'பீஸ்' கொண்டுவந்து கொடுப்பதாக ஒத்துக்கொண்டார்கள். அவர்களை வாத்தியார் பெஞ்சியின்மேல் நிற்கவைத்து அவமானப் படுத்தினுர். ரவியின் முறை வந்தது. அவன் சம்பளம் கொடுக்கவில்லை.

"ரொம்ப நன்ருகத்தான் இருக்கு ரவி! நீயும் கோபாலனும் தான் இதுவரைக்கும் தவருமல் 'பீஸ்' கொடுக்கிறீர்கள் என்று நல்லபெயர் எடுத்திருந்தீர்கள். இன்றைக்கு ஏழைமுருகன் கூட 'பீஸ்' கொடுத்து விட்டானே! உனக்கென்னடா வந்தது?'' என்று வாத்தியார் ஆச்சரியத்துடன் கேட்டார்.

ரவிபதில் சொல்லாமல் தலையைக் கவிழ்த்துகொண்டு நின்று கொண்டிருந்தான்; வாத்தியாருக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. பெஞ்சியின்மேல் ஏறுடா கழுதை! நாளைக்கு 'பீஸ்' கொண்டு வராமல் இரு சொல்இறேன் உஷார்'' என்று கர்ஜித்தார்

ரவியை வாத்தியார் சினந்துகொண்டது முருகனுக்குச் சகிக்கவில்லை. ''சார், ரவி ஐய்யா தான் எனக்கு 'பீஸ்' கொடுத்து, என்னைக் காப்பாற்றினார்; தனக்கென்று கொண்டுவந்த பீஸ்ஸை எனக்குக் கொடுத்து விட்டாரோ என்னவோ'' என்று நடுங்கிக் கொண்டே சொன்னான்.

வாத்தியார் ஆச்சரியத்தில் மூழ்கினார். ''ரவி, முருகன் சொல்வது உண்மையா?'' என்று கேட்டார்; அதற்கு 'ஆமாம்' என்று ரவி தலை அசைத்தான்.

வாத்தியாரின் முகத்தில் திருப்தியும் ஆனந்தமும் ஆச்சரியத்துடன் போட்டியிட்டன; நிதானமாக ''உன் பணத்தை அவனுக்கு ஏன் கொடுத்தாய்?''

ரவி, ''பின்னே அவன் என்ன செய்வான் பாவம்? அவனுடைய அப்பாவுக்கு ரொம்ப ஜுரமாம்; அவன் அம்மாகூட இரண்டு நாளாய் எங்காத்துக்கு வேலைக்குக்கூட வரமுடியாமல் தவிக்கிருள் பாவம்; அவள் வேலைக்கு வந்தால் ஒழிய அவளுடைய போன மாத சம்பளத்தை எங்கம்மா கொடுக்கமாட்டேன் என்கிருள். என்னைப் பள்ளிக்கூடத்திலிருந்தாவது துரத்துங்கள்; முருகனை மாத்திரம் திட்டாதேயுங்கள் சார்; அவன் பாவம், ஏழை மூன்றுநாளாக சாப்பிடக்கூட இல்லை. பரம ஏழை; அவனை திட்டினால் காந்தித் தாத்தாவுக்குப்பிடிக்கவே பிடிக்காதே'' அதன் மேலே அவனால் பேசமுடியவில்லை; துயரம் மென்னியை பிடித்தது; கண்களில் ஜலம் முட்டிக்கொண்டு வந்தது.

வாத்தியாருக்கு உடல் சிலிர்த்தது; உள்ளம் உருகிற்று; ரவியைசமீபித்து பிரியமாகஅவன் முதுகைத்தடவிக்கொடுத்தார்; ''ரவி நீ ரொம்ப நல்ல பையன், முருகனுக்கு ரொம்ப உதவி செய்தாய்: ஆனால் உன் அப்பா அம்மாவைக் கேட்காமல் நீ அவனுக்குப் பணம் தந்தாயே? அது தவறில்லையா?'' என்று பரிவுடன் கேட்டார்.

ரவி அம்மாவிடம்தான் நான் முருகனிடம் அவன் அம்மாவின் சம்பளத்தைக் கொடுத்து அனுப்பு என்று எவ்வளவோ மன்றாடி கேட்டுக் கொண்டேனே, அவளுடைய சம்பளத்தையே அவனிடம் கொடுத்தனுப்பமாட்டேன் என்றவள், தானம் கொடுப்பதற்கு ஒத்துக்கொள்வாளா சார்? எனக்கு என்று கொண்டுவந்த பீசை அவனுக்குக் கட்டிவிட்டேன்; அவனுக்குச் சேரவேண்டிய பணம் தானே சார்!

இளஞ்சிறுவனின் கேள்விக்கு பதில் சொல்ல முடியாமல் வாத்தியார் திணறினார். கொஞ்சம் சமாளித்துக்கொண்ட பிறகு ''நீ செய்தது சரிதாண்டா கண்ணு; பெரியவாள் ஆகஆக, ஆசை கஞ்சத்தனம், நிர்தாக்ஷிண்ணியம் எல்லாம் கூடவே வளர்ந்து விடுகின்றன: அவைகளை ஜயித்து தர்மாத்மாவாகவும், லோகோபகாரியாகவும், சத்தியவானாகவும் இருப்பவன்தான் பரமயோக்கியன்; நம் நாட்டில் அத்தகைய புண்ணிய புருஷனைத் திகழ்ந்தவர்

மகாத்மா காந்தி ஒருவர் தான். அவருடைய உபதேசங்களை நாம் ஒவ்வொருவரும் கடைப்பிடித்து நடத்த வேண்டும். நீ நல்ல பையன் ஏழை முருகனுக்காக சிக்ஷை அனுபவிக்கவும் தயாராக இருக்கிறாய்.

ஆனால் நான் அவன் பல தடவை இலவசச் சம்பளம் சிபார்சுசெய்யும்படிக்கேட்டும் செய்யாமல்கஞ்சனாக இருந்து விட்டேன். உன்னைப் பார்த்து தான் என்புத்தியும் தெளிவு பெறுகிறது: உன்னைக் காட்டிக் கொடுத்து வேடிக்கைப் பார்க்க நான் சம்மதிக்க வில்லை. உன்னுடைய இந்தமாத பீசை நானே உனக்காக கட்டிவிடுகிறேன். முருகா அம்மாவுக்கு ரவி வீட்டில் சம்பளம் கொடுத்ததும் என்னிடம் தந்துவிடு. நான் இன்றே உனக்கு நிரந்தரமாக இலவசச் சம்பளத்துக்குஏற்பாடு செய்கிறேன்.

குழந்தைகளா, ரவியைப் போல்நீங்களும் ஏழைகளுக்கு உதவுவீரா? இதுவே சமூக சேவை! பொய் சொல்லக் கூடாது, யார் மனதும் நோகும்படிப் பேசப்படாது. அப்பொழுதுதான் நீங்கள் காந்தித் தாத்தாவுக்கு சிஷ்யர்கள் ஆவீர்கள்; சொல்லுங்கள், மகாத்மாகாந்திக்கு ஜேய்!

பசங்கள் அனைவரும் உத்ஸாகத்துடன் ஜயகோஷம் செய்தார்கள்.

மேனாட்டுத் தத்துவம்

இரண்டாம் பாகம்

1. சர்ச்சை—சிம்போசியம் (Symposium)

2. பேட்ரஸ் (Phaedrus)

ரா. ஸ்ரீ. தேசிகன், எம். ஏ.

சென்ற இதழ்த் தொடர்ச்சி

வேதங்களிலும், உபநிடதங்களிலும் காணப்படும் உண்மைகள் புராணங்களிலும், இதிகாசங்களிலும் அலர்கின்றன; உண்மையை விளக்குதல் பொருட்டே உருவகப்படுத்திச் சொன்ன விஷயங்களைச் சுற்றி அர்த்தமற்றப் பலவாதங்களைச்சிலர்எழுப்புகின்றனர், லக்ஷ்மி நாரணன் மார்பில் உறைகின்றாள் என்ற பொருளை ஆராய்வோம்: உண்மையாம் நாரணன் மார்பில் திரு விற்றிருக்கிறாள்: உண்மையிலே அழகு தோன்றுகின்றது என்றபொருளை அளித்துவிட்டால் வாதங்கள் இறந்துவிடும். வெறுஞ் சொற்களை வைத்துக்கொண்டு வெம்போர் புரிகின்றவர்கள் உண்மையை அறிய முடியாது. திரு மூலந்தான் நாரணனை அடையமுடியும் என்று வைணவர்களில் ஒரு சாரார் கூறுகின்றனர். லக்ஷ்மி ஜீவகோடியிலே சார்ந்தவளா? அல்லது எம்பெருமானோடுசமானமாய்க் காட்சி அளிக்கின்றாளா? என்ற சர்ச்சைகளை எழுப்பிப் பிளவுகளையும், மனக்கசப்பையும் வளர்க்கின்ற மாந்தர்களுக்கு உண்மை உதயமாகாது, என்று ஐயமின்றிச் சாற்றலாம்: திரு மூலந்தான் ஆண்டவனை அடைய முடியும் என்பதற்குச் சரியான உரைதரவேண்டும். அருள் வாயிலாகவும், அழகு வாயிலாகவுந்தான் உண்மை புலனாகும். என்றதுதான் இதற்குப் பொருளாகும். அருளையும் அழகையும், உண்மையையும் பிரிக்கமுடியாது. அருள்தான் அழகு, அழகுதான் உண்மை, மேனாட்டுக்கவி கீட்ஸ் (Keats) தரும் வனப்புத்தான் வாய்மை, வாய்மைதான் வனப்பு. (Beauty is truth truth, beauty) என்ற அழியா வரி நம்சிந்தையில் எப்பொழுதும் ஒலிக்காமற் போகாது.

இந்த அகில புவனங்களும் உண்மையிலேதான் பிறக்கின்றன; உண்மையிலே பிறக்கின்றவை அழகாய்த்தான் திகழும். பகவானுக்குப் புவனசுந்தரன் என்ற பெயரை ருக்மிணி அளிக்கின்றாள். புவனம் அழகாயிருப்பதற்குக் காரணம் ஆண்டவன் சம்பந்தப்பட்டிருப்பதால் என்ற உரைகூடப் 'புவனசுந்தரன்' என்ற சொற்றொடருக்குத் தரலாம். திரு, திருவாயிருப்பதற்குக் காரணம் மாலோடு சேர்ந்திருப்பதால்; மால் மாலாயிருப்பதற்குக் காரணம் திருவோடு இணைந்திருப்பதால்; இரண்டையும் பிரிக்க முடியாது என்பதுதான உண்மை.

எல்லாம் அவன் சிருஷ்டியாழிலிருந்து வழிந்து வருகின்ற கானவெள்ளம் என்ற எண்ணத்தோடு நாம் உலகை நோக்கினோமானால், ஒவ்வொரு குரலும் தேனினிக்கும் என்பதில் ஐயமில்லை. பறவைகளின் வெறும் புலம்பலில் ஒரு நல்லிசை பிறக்கும்; ஒடு

இன்ற ஓடையில் ஒரு தெய்வப்பண் கேட்கும்; காற்றின் ஓலத்தில் கண்ணன் புல்லாங்குழலின் இனிய கீதம் எழும்.

உண்மையை நாடினால், அழகு தோன்றும்; அழகுள்ளது தான் அழியா இன்பந்தரும். எங்கும் அழகு பழுத்தொழுகக் காண்போம். அந்த அழகைப் பருகிப் பருகி உண்மையை நாடிய நம்மாழ்வாரின் பாசுரம் இங்கு நோக்கத் தகுந்தது.

'அடங்கெழில் சம்பத்து
அடங்கக்கண்டு ஈசன்
அடங்கெழில் அஃதென்று
அடங்குக உள்ளே,'

இத்தகைய திருவை வணங்குகின்ற தத்துவத்தைச் சிம்போசியம், பேட்ரஸ்—என்ற இரண்டு சம்பாஷணைகளில் நாம் பார்க்கின்றோம். இவைகளின் நயங்களை நாம் நுகர்வோமாக.

கிரேக்க மொழியில் தோய்ந்து ஊறிக்கிடந்த ஜொவெட் (Jowett) இச்சம்பாஷணைகளுக்குத்தாம் அளித்த முன்னுரைகளில் இவைகளின் நயங்களைத் துருவி ஆராய்கின்றார். நன்கு செதுக்கப் பட்ட சிற்பம்போலத் திகழ்கின்ற சிம்போசியத்தின் வனப்பு இவ ருடைய மனத்தைக் கவர்கின்றது. பழுத்த சொற்களின் அமைப்பி லுஞ்சரி, ஒழுங்காய் ஓடுகின்ற நிலையிலுஞ்சரி, சிம்போசியத்திற்கு ஈடாகாது பேட்ரஸ் என்று அவர் கூறுகின்றார். பிளேட்டோ எழுதிய எல்லா நூல்களில் வடிவழகில் இது ஒரு சிகரம்போல ஒரு மௌலிபோல் மிகச்சிறந்தது என்ற கருத்தையும் அவர் அளிக்கின்றார்.

அகாதன் (Agathon) அளிக்கின்ற விருந்திற்குச் சாக்ரடீஸ் நல்லதோர் உடை அணிந்தே போய்க்கொண்டிருக்கிறார். வழியில் அரிஸ்டாடிமஸ்ஸைச் (Aristodemus) சந்தித்து அவரையும் விருந் துக்கு அழைக்கின்றார். அவர் வீட்டிற்குள் நுழைந்ததும் சாக்ர டீஸைத் தேடிப் பார்க்கின்றார். சாக்ரடீஸைக் காணோம். வழியில் பின் தங்கியே அவர் நீண்ட சிந்தனையில் ஆழ்ந்துவிட்டார் என்று செய்தி கிடைக்கின்றது. விருந்து பாதி முடிந்ததும் அவர் அங்கே வருகின்றார். புல்லாங்குழல் இசை வேண்டாம்; அன்பைப்பற்றி (Love) ஆராய்ச்சி செய்வோம் என்று எரிக்ஸிமாக்கஸ் (Eryximachus) என்ற மருத்துவன் மொழிகின்றார். பீட்ரஸ் சம்பாஷணை யைத் தொடங்குகின்றார்.

அன்புத் தெய்வந்தான் எல்லாத் தெய்வங்களைக் காட்டிலும் வலிவுள்ள தெய்வமென்று பீட்ரஸ் மொழிகின்றார். அன்புத் தெய்வந்தான் எல்லாவற்றிற்கும் ஆதியாய்த் திகழ்கின்றது. முதலில் எல்லாம் குழப்பமாயிருந்தன. பிறகு பூமி தோன்றிற்று: பூமியோடு அன்பும் பிறந்தது என்று ஹெஸியட் இசைக்கின்றார். எனவே பிற தெய்வங்களுக்கு முன்பு இத்தெய்வம் தோன்றிற்று என்று கூறலாம். ஒரு காதலனுக்கு அன்பைத் தவிர வேறு ஆக்கமுண்டோ? உறவு, புகழ், கௌரவம் இவைகளைக் காட்டிலும் அன்பு அவனுக்கு ஒரு தனிச்சக்தியை அளிக்குமென்பதில் சந்தேகமில்லை. அன்புதான் ஒருவனுக்குத் தைரியத்தை அளிக் கும். தன் காதலியின் பொருட்டு உடல், பொருள், ஆவி—இம் மூன்றையும் அவன் துறக்கத் தயாராயிருப்பான். பீலியஸ் மகள்

அல்செஸ்டிஸ் (Alcestis) தன்னுடைய கணவனுக்காகத் தன் உயிரை இழக்கச் சம்மதித்தாள். தாய் தகப்பன் முன் வரவில்லை. தாய் தகப்பன் அன்பைக் காட்டிலும் இந்தக் காதல் மிகச்சிறந்த தாய்த் திகழ்கின்றது. இதன் பேரொளி முன் அந்த அன்பு மின்மினிபோல் மறைந்து விடுகின்றது என்றால் காதலின் பெருமையை என்னென்று சாற்றுவது. இன்பத்தையும், அறத்தையும், இம்மையிலும், மறுமையிலும் இவ்வன்பு அளிக்கும் என்று பீட்ரஸ் தம்முடைய உரையை முடித்தார். காதலைப்பற்றிய சிறப்பைக் குறுந்தொகையில் நாம் காண்கின்றோம்,

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆர் அளவு இன்றே சாரல்
கருங்கோல் குறிஞ்சிப் பூக் கொண்டு
பெருந் தேன் இழைக்கும் நாடனொடு நட்பே.

இரண்டாவதாகப் பாசேனியஸ் (Pausanias) அன்பைப் பற்றித் தம்முடைய கருத்தை வெளியிடுகின்றார். பீட்ரஸ் பகர்ந்தகருத்தை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. அனபு ஒரு முறையான அன்பாயிருந்தால், அவர் கூறியதை நாம் ஏற்கமுடியும்; ஆனால் எந்தக் காதலை? எந்த அன்பை?—நாம் நம் புகழுக்குப் பொருளாக்கிக் கொள்வது என்றதை நாம் துருவி ஆராயவேண்டும். இரண்டு விதமான அன்புகளைப் பார்க்கின்றோம். ஒன்று அழியக்கூடிய இந்த்ரிய சுகத்திற்காகப் பிறக்கும் காதல். இது போற்றத் தகுந்ததன்று. உடல் அழகில் ஈடுபட்டுப் புரிகின்ற காதல் இழிவான காதலாகும் [இதைக் காமம் என்று சொல்லி விடலாம். ஆனால் பழைய நூல்களில் காமம் என்ற சொல்லிற்கும் 'காதல்' என்ற சொல்லிற்கும் வித்யாசத்தைக் காணமுடியாது. காதலால் அயோத்தி உயர்ந்தது; காமத்தால் இலங்கை அழிந்தது] உடலில் மலர்கின்ற வடிவழகில் ஈடுபடாது, அகஉயிரில் அலர்கின்ற குணவழகில் ஆழ்கின்றதுதான் உத்தம காதலின் இலக்கணமாகும்; இதுதான் இரண்டாவதாகக் கூறப்படும் காதல்; பணத்திற்கோ, செல்வத்திற்கோ அரசியலில் பிறக்கும் அதிகாரத்திற்கோ ஆசைப்பட்டு அகவுயிர் வாழ்க்கையின் பேரின்பத்தை இழப்பது அழகன்று. அகவுயிரின் மீது வைக்கப்படும் அன்பே தூய அன்பாகும். பரந்த உலகத்தை ஒருவன் அடைந்தாலும் என்னும் தன் ஆத்மாவாம் மாசற்ற மணியை யிழப்பானாயின் என்று ஏசுநாதர் இயம்பும் உபதேசம் நம் செவியில் ஒலிக்காமற் போகுமோ? ஆழ்வாரும்,

இச் சுவைதவிர யான் போய் இந்திர லோகமாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன் அரங்கமாநகருளானே.

என்று பாடுகின்றானன்றோ?

அகவுயிர்பால் வைக்கும் அன்பே அன்பு என்று பாஸேனியஸ் தம் மொழியைக் கூறி முடித்ததும், யுரிக்சிமாகஸ் என்ற மருத்துவர் விளம்பலுற்றார். பாஸேசினியஸ் இரண்டு விதமான அன்புகளைப் பற்றிச் சொன்னார் அவர் இப்படிப் பிரித்ததில் உண்மை யில்லாமலில்லை.

இத்தகைய இரண்டு விதமான அன்புகள் விலங்குகளிடத்திலும், செடி கொடிகளிலும் இருக்கின்றன. உடலிலும் நல்லது—கெடுதல் இவ்விரண்டும் உறைகின்றன. நல்லதைக் கைக்கொண்டு, கெடுதலை விட்டுவிட வேண்டும்; மருத்துவன் கெடுதலையும் நல்லதாக ஆக்கவேண்டும்; சங்கீதத்தில் இந்த நிலையைப் பார்க்கின்றோம் ஆரோகணம்; அவரோகணம்—மேல்—கீழ் இவ்விரண்டும் கரைந்து இன்னிசை அளிக்கின்றன; மனிதக்காதலும், தெய்வக்காதலும் மணக்கவேண்டும்; மண்ணும் விண்ணும் ஒன்றாய்க் கரையவேண்டும்; இரண்டிற்கும் பகையில்லை; மண்ணிலே தோன்றிய சீதையை விண்ணிலே தோன்றிய இரவிகுலத்து இராகவன் மணந்தானென்றால், மண்ணும் விண்ணும் மணந்தன என்றதுதான் இதற்கும் பொருளாகும்.]

யுராக்கிமாக்கஸ் தம் பேச்சை முடித்ததும், ஆரிஸ்டாபனீஸ் (Aristophanes) தம்முடைய கருத்தை வெளியிட ஆரம்பித்தார். அன்பின் ஆற்றலை மனிதர்கள் உணர்ந்தார்களில்லை. உண்மையாய் அச்சக்தியை உணர்ந்திருப்பார்களேயாகில் அன்பிற்கு உன்னதமான கோயில்களும், காணிக்கைகள் செலுத்துவதற்காக விசாலமான பீடங்களும் நிறுவியிருப்பார்கள். ஆதியிலே மனிதன் வடிவம் பெண் வடிவம் இவ்விரண்டுஞ் சேர்ந்த அர்த்தநாரி வடிவம் இம்மூன்றுந்தான் காட்சி அளித்தன; பழைய மனிதன் தோற்றத்தை அரிஸ்டாபினீல் சித்திரிக்கிறார்; அவன் உருண்டையாயிருந்தான்; அவனுக்கு நான்கு பாதங்கள் இருந்தன, முதுகு பக்கங்கள்—இவைகளை நோக்கினால் ஒரு வட்டந்தான் நம் முன் விரிந்து நிற்கும்,

(தொடரும்)

பக்தன் ஸ்ரீ ஜயந்திமலர் **அணா 12**

மலர் 5. இதழ்5. மன்மத ஹு ஆவணிமீ. ஆகஸ்ட்—ஸெப்டம்பர்' 55

பொருளடக்கம்

	பக்கம்		பக்கம்
கண்ணனென்னுங் கருந்தெய்வம்	333	தேவகி புலம்பல்	413
அன்புக்கு அடிமை	345	ஸ்ரீ கிருஷ்ண ஸௌலப்யம்	417
ஓவிய மலர் மாலை	349	திருப்புகழில் கண்ணன்	424
ஷை விளக்கம்	365	முகப்புப் பட விளக்கம்	428
கீதகோவிந்தம்	373	லீலாசுகரும் கண்ணனும்	429
கீதையில் பகவத் ப்ராப்தி	381	க்ருஷ்ண த்ருஷ்ணா	438
சங்கத் தமிழ்க் கண்ணன்	392	ஓவிய மலர் விளக்கம் (தொடர்ச்சி)	442
கீதை—விச்வரூபதர்சனம்	397	மேலட்டைப் பட விளக்கம்	444
உஷா பரிணயம்	405	ஸ்ரீக்ருஷ்ணாநுஸ்மரணம்பரம்	445

71, வெங்கடரங்கம்பிள்ளைத் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை—5.

(போன் 86109)

ஜகன்மோகினி: 32-ம் ஆண்டு, 1955

தனிப்பிரதி அணா 4.

வருடச் சந்தா ரூ 3.

வாழ்க்கையில் ஒரு குறிப்பு

என் பிதாவின் தவறை நான் ஒப்புக்கொண்டு மறை பொருளாகவும் புனைப்பெயரிலும் எழுதும்படியாக என்னைத் தூண்டியது ஜகன்மோகினியின் "வாழ்க்கையில் ஒரு குறிப்பு" என்கிற பத்திரியையாகும். என் தகப்பனார் ரயில்வேயில் வேலை பார்க்கும் உத்யோகஸ்தர். ரயில்வே ஸ்டேஷனிலேயே எங்களுக்கு வீடுவசதி செய்திருந்தார்கள். சாமான்கள் ஏராளமாகச் செல்லும் கூட்ஸ் வண்டியிலிருக்கும் பார்ஸல்களில் கை கூசாமல் ஆட்களும் எங்கப்பாவும் சேர்ந்து சூரையாடிக் குடும்பத்தை ஜம்மென்று நடத்திவிட்டார்கள். பழக்கூடைகள் பார்ஸல் வரும் நாளில் எங்கள்பாடு குஷிதான். ஒரு பெரிய பணக்காரர்களின் வீட்டில்கூட இம்மாதிரி போகம் நடக்காது; அப்படியே ஜம்மாளத்திலிருந்தோம்.

பிறர் சாமான்களை சூரையாடுகிறார் என்று எனக்கு அப்போது தெரியாது. ஒரு சமயம் எங்க பெரிய அப்பா வந்திருந்தார். அவர் இந்த அனியாயங்களைப் பார்த்து, இது மகாபாபமாயிற்றே என்று கண்டித்து, என் பிதாவுக்கு புத்தி புகட்டுவதை நான் கேட்டுக் கொண்டிருந்த பிறகுதான் இது விஷயமே எனக்குப்புரிந்தது. ஆனால் தின்பண்டங்களில் ருசிதான் அதிகமாக இருந்ததால் நியாய அனியாயம் மறந்துபோய்விட்டது. மேலும் சில வருஷங்களில் எனக்குக் கல்யாணமாகியது. என் மாமனார் நியாயத்திற்கும் சத்தியத்திற்கும் கட்டுப்பட்ட மகாமானி. அவருடைய மாதிரியையும் என் பிதாவின் போக்கையும் பார்க்கப் பார்க்கத்தான எனக்கு என் பிதாவின் பயங்கரச் செய்கையின் விபரீதம் நன்றாகப் புரிந்து சதா கவலையாகவே இருந்தது.

திடீரென்று ஒருநாள் என் மாமா அலறிக்கொண்டு ஓடி வந்தார். அப்பா ஏதோ குற்றத்தில் அகப்பட்டுக்கொண்டு விட்டதாயும் இவருக்கு உடந்தையாயிருந்தவர்களே காட்டிக் கொடுத்து விட்டதாயும் இன்று இரவுக்குள் 1000 ரூபாயை இரண்டாம்பேர் அறியாதபடி கட்டிவிட்டால் தப்பித்துக் கொள்ளலாம் என்றும் உதவிபுரிய வேண்டும் என்றும் கதறினார்.

என் மாமனார் இதைக் கேட்டு முதலில் என் பிதாவை வெறுத்தார். திட்டினார்; திருடரின் மகளையா நான் மருமகளாகக் கொண்டு வந்தேன். திருட்டுச் சொத்தில் வளர்ந்த பெண்ணா இவள்! என்று மனம்முறிந்து பேசி விட்டார். பிறகு சற்றுத் தனக்குத்தானே தெளிவுபெற்று தான் செய்த தவறுதலை உணர்ந்துஇனியாவது புத்தியாகப் பிழைக்கும்படி சொல்லுங்கள்! இந்த உத்யோகத்தை வேறு ஆபீஸில் மாற்றிவிடும்படி நானே சிபார்சுகள் செய்கிறேன் என்றுகூறி தானே ஆயிரம் ரூபாயையும் கொண்டு கொடுத்து ரயில்வேயைச் சேர்ந்த வேறு வகுப்புக்கு மாற்றிவிட்டார். அதன் பிறகு சரியானபடி நடப்பதாகவே தெரிகிறது.

நான் ப்ரஸவத்திற்கு என் பிறந்தகம் சென்றிருக்கையில் இந்தக் குறிப்புக் கட்டுரையை என் பிதாவுக்கே காட்டினேன். அவருடைய உள்ளம் புழுங்கிக் கண்ணீர் வழிந்தது; எனினும் அம்மா இதைக் கட்டாயம் அனுப்பி விடு; என்னைப்போன்ற தவறுதலை யாரும் செய்யாது வாழட்டும்; அந்த விதத்திலாவது உதவியாக இருக்கட்டும் என்றார்; அதனால் அனுப்பியுள்ளேன்.

—உண்மைவிளம்பி.

திருச்சந்த

இசைப் பதுதி

ராகம்: ராமப்ரிய

கீர்த்

பல்

1 , , ப த — ப ப ப ப — ப ம க ரி — ரி ரி ப ம

. . ந ட — ந் த க ா — . ல் க ள் — . நொ ந் த

கா , க — க ம ப ா — ப ப ப த — ப ம ப த

. . . ஏ — . ன ம ா — . ய் இ ட — ந்த . மெ ய்

2 க ம ப த — பாபாகமபத — நிதபமகரிரீ — ஷை

சுரம்நட — ந் த க ா . . — . . .ல்கள். —

, க ; ப ப — ம க மா பா பா — பா பா ப த நி த — ஷை

ஏ . — . . ன ம ா . — . ய் இ ட ந் —

3 க ம ப த — ஷை — நிஸ்ரிஸ்நிதபம — கரிகாமா ப ம

சுரம்நட — — . . . ல்கள் . . — நொ ா ந் த

ஷை — ஷை — ஷை — ஷை

4 ஷை — ஷை — ஷை — ஷை

ஷை — ஷை — ஷை — . ஷை

அநு

; ; ப த ப ம — ம ப த த — த த நி த — த நி ஸ் ா

. . க . ட ந் — . ந் த க ா — . ல் ப ர — ந் த க ா

; ; ப த நி த — ப ம ப த — த த த நி — ஸ்ாரிஸ்நிதநிஸ

, , க . ட ந் — . . த க ா — . ல் ப . — . . . . ' . ந்தகா

ஷை — ஷை — ஷை — ஷை

; ; கா கா — கா ப ம க ரி ரீ — ஸ் ா ஸ்ாஸ்நிதா — நீ ஸ ா ரீ ஸ ா

, , இ ட — . ந் த , வா . — று , எ ,ழுந் — . தி ரு ந்

சிட்ட

க ம ப ா — , த த ப — ம ப த ப — , ம க ரி

ப த த ப — , ம ப த — நி நி த நி — , ப த நி

ரி ரி ஸ் நி — த நி ஸ் ரி — க ரி க ம — க ரி ஸ் நி

ஸ் ா ரி க — ரி க ரி ஸ் — நி , ஸ் ரி — ஸ் ரி ஸ் நி

ப ம ப த —

. , ந ட —

சர

, , ப த — ப ம ப த — த த த த — தாதாபதநித

. . க ர — ண்ட . ம ா — . டு . பொய் — . கையுள் . .

. . ப த — ப ப ப ப — ம க ரி ரி — ரி க ப ம

. . பு ர — ண்டு வீ . — , ழ . . — வ ா ணே .

; ; ப த ப ம — ம ப த த — த த நி த — நி ஸ் ஸ் ா

. . தி, ரண் — . ட தோ . — . . ளி ர — ணி ய ன்

; ; கா கா — கா ப்ப ம க ரி ரீ — ஸ் ா ஸ்ாஸ்நிதா - - நீ ஸ ா ரீ ஸ ா

, . இரண் — . டு . கூ . - - று , செ ய் . — து க ந் ,

சிட்டஸ்வரம் பாடு

விருத்தம்

ஏ. ராஜம்மாள்.

தாளம் : ஆதி

தனை

லவி

க ரி ஸ ா — ஸ்ா ஸ்ாஸநி தா நி நி ஸ ரி — ஸரிகாகமம ரி ||
வோ . . — . . ந . டு ங்க . ஞா . — . . . . . . ||
, , , நி — த நி ஸ் ா , , ஸ் நி — தாபாபமகரி ||
. . . கு — லு ங் க வே வ ா . . விலங் — குமால்வரை ||
ஷை ஷை ஷை — ஷை ||
, , , த — நி ஸ ரி ரி ஸ்நிதநிஸ்ாஸ்ஸ்—நிதபாபமகரி ||
. . . கு — லு ங் க வே வ ா வி .லங்குமா — ..ல்வரை. . . ||
ஷை — ஷை ஷை — ஷை ||
ஷை — ஷை கரிஸ்நிரிஸ்நி த-ஸ்நி தபநி தபம ||
ஷை — ஷை வி.லங்கு . . .—ம ா . ல் வரை . ||
ஷை ஷை ஷை — ஷை ||
. ஷை — ஷை கா ரிஸ்நிரிஸ்ாஸ்ஸ்—நிதபநிதாபம ||
ஷை — ஷை வி ல .ங்குமால்வ, — . . . ரை சு . ||
கரிகம—பா தா ||
ர ம் . , — ந ட : ||

புல்லவி

ஸ் ஸ் ஸ் ரி — ரி ரி ஸ் ா ஸ்ாஸ்ாஸ்ாஸ்நி—ரிஸ்நீதாப்ா ||
. . . . வி — ரி க் க ரை . . . .-கு .டந்தையுள் ||
ஷை — . . . . ஸ் ரி க ரி ரிஸ்ஸ்நிநிஸ்ரிஸ்--ஸ்நிநிதபாப ||
ரை . . . . .கு . . டந்-- . . தையுள் ||
ஷை — ஷை ரிஸ்ஸ்நிதநிஸ்ரி — காரீகாகா ||
. . . . .கு. --டந்தையுள் ||
ரி ரி ஸ் ஸ் — ஸ்ாநிதபாபா பமகரிகாகா — ரீ ப ம க ரி ரீ ||
து . பே . — . சு . வா . . .ழி .கே — • னே . . ||

ஸ்வரம்

ஸ ா , நி — த நி ஸ ரி க ம ப ரி — , க ா ம ||
ஸ் நி த ப — , ம க ம ப த நி நி — ஸ் ா ; . ||
ஸ் ரி க ரி — , க ரி க ரி ஸ் ரி ஸ — , நி த நி ||
ஸ் ா ரி ஸ் — நி த நீ ஸ் நி த ப — த ா நி த ||

ணம்

நீ நி நி த — நி த ப ா , , ம ப — ரி க ம ப ||
. . . . ● — ரு ம் ப னை . . பெரும் — . ப . மும் ||
ரி ஸ ஸ ஸ — ஸ ரி க க க ம க ரி — க ம ப ா ||
ப ா ய் கு — று ங் கு ● நெடுந் . — த . கா ய் ||
ஸ் ஸ் ஸ ரி — ரி ரி ஸ் ா ஸ்ாநீதாநீ — ஸ்ரிகாரீகா ||
. . . . சி — ன ங் கொ ள ா . க . . — மொன்றையும் ||
ரி ரி ஸ்ஸ் — ஸ்ாநிதபாபா ப ம் க ரி — ரீ ப ம க ரி ரீ ||
த . சி ங் — . க . மெ ன் . . . ப . — துன்னைமே. . ||

பல்லவி பாடவும்.

காளிதாசர் கனவு

8. உமாப்ரஸாதம்—குமாரஸம்பவம்

[கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரி]

[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

ஒருநாள் ஒரு பிரம்மசாரி மான் தோல் தரித்துப் பலாச தண்டத்தைக் கையில்ஏந்திச் சடையுடன் கூடினவராக பிரம்மசர்ய ஆசிரமமே உருவெடுத்ததுபோல் விளங்கிக் கொண்டு பார்வதி தேவியின் ஆசிரமத்தை யடைந்தார். அதிதிகளை வழிபடுவதில் மிகப் பிரியமுள்ள பார்வதி அவரை எதிர்கொண்டழைத்து அவருக்கு உபசாரஞ் செய்தாள். எல்லோரும் சமம் என்பது உண்மையானாலும் நல்லவர்கள் பெரியோர்களைக் கண்டால் மிகவும் பாராட்டிப் பெருமைப் படுத்துவார்கள். அவர் அந்த உபசாரங்களை அன்புடன் பெற்றுக்கொண்டு பின் வருமாறு கூறினார்:—

"தர்ப்பை முதலியவை உன் நியமத்திற்குத் தக்கபடி இவ்விடத்தில் இடைக்கின்றனவா? ஸ்னானம் செய்ய தண்ணீர் வசதி நிறைந்திருக்கின்றதா? உன் உடல் தவஞ் செய்வதற்கு வேண்டிய ஆற்றலுடன் கூடியிருக்கின்றதா? உடல்தான் அறவாழ்வுக்கு வேண்டிய பொருள்களில் மிகவும் இன்றியமையாதது. உலகத்தில் 'அகத்தினழகு முகத்தில்' என்று கூறுவது உனக்கே ஒத்திருக்கின்றது. உன் தவத்தின் நிலை உயர்ந்த முனிவர்களுக்குக்கூட தவமார்க்க முறையை உபதேசஞ் செய்கின்றது. கங்கையால் வாய்ந்த தூய்மையைவிட உயர்ந்த தூய்மையை இமயமலை உன் தவத்தால் அடைந்திருக்கின்றது. நீ நீர்விட்டு வளர்த்த செடிகளின் தளிர்கள் உன் உதடுகளைப்போல் விளங்குகின்றன.

உன்கையிலிருந்து அச்சமற்றுயில்லை உண்ணும் மான்களை அன்புடன் வளர்க்கின்றாயா? அவைகளுடைய கண்கள் உன் கண்களைப் போல் இருக்கின்றன. முப்பால் என்று கூறப்பட்ட அறம்பொருள் இன்பங்களில் அறமே உயர்ந்தது என்று உன் தவம் சுட்டிக் காட்டுகின்றது.

உன்னை ஒரு கேள்வி கேட்க விரும்புகின்றேன். எனக்கு இவ்வளவு உபசாரஞ் செய்துவிட்டு என்னை அன்னியன் என்று கருதக்கூடாது. ஒருவர்க்கொருவர் ஏழு சொற்கள் பேசினாலே சினேகம் ஏற்படும் என்று அறிவாளிகள் கூறுகின்றார்கள்.

நீயோ உயர்ந்த குலத்தில் பிறந்தவள். உன் சரீரமோ மூவுலகங்களின் அழகும் திரண்டு உருவெடுத்ததுபோல் விளங்குகின்றது. உன் செல்வமோ அளவு கடந்திருக்கின்றது. வயதோ இளம்பருவம்; நீ எதற்காகத் தவஞ் செய்ய வேண்டும்? முதுமைப் பருவத்தில் தரிக்கவேண்டிய மரவுரியை இளமைப் பருவத்தில் ஏன் தரிக்கவேண்டும்? தெய்விக உலகத்தை அடைய வேண்டும் என்று உன் ஆசையா? இமயமலை தெய்விக உலகமாயிற்றே?

வாழ்க்கை தீபம்

வை. மு. கோ.

சௌபாக்யவதி லக்ஷ்மிக்கு ஆசிர்வாதம். உபயகுசலம்.

உன்னுடைய கடிதம் கிடைத்தது. "நீ எத்தனை பாடு பட்டுக் கரடியாய்க் கத்தினாலும் இந்த வரதக்ஷிணை என்கிற பேயை நம் நாட்டைவிட்டு இந்தத் தலைமுறையில்வேரறுக்க, பகவானே இன்னொரு அவதாரம் எடுத்துத்தான் இந்த அஸுரனையும் ஸம்ஹாரம் செய்யவேண்டும் என்று தோன்றுகிறது." என்று நீ எழுதியிருப்பதைப் படித்து நான் சந்தோஷமடைகிறேன். இந்த ஒரு காரியத்திற்காக பகவானே ஒரு அவதாரம் செய்து இந்த அரக்கனை ஒழிக்கும்படியாகச் செய்யும் பிள்ளை வீட்டார்களில் சிலரை உலகம் என்றுமே மறக்காதல்லவா?

லக்ஷ்மீ! இவைகளை எல்லாம் தீர்க்கமாக யோசித்துத் தான் உலகத்தில் சகலமும் நடைபெறுகின்றது. ஸ்ரீமத் பகவத் கீதையிலும் இதையே வற்புறுத்தி காலமும் சந்தர்ப்பமும் வாய்க்கும்போது தான் வந்து பிறப்பதாக பகவான் சொல்லி இருக்கிறார்போலும். பகவான் அவதாரமே செய்யாமல் கல்யாணம் செய்துகொள்ளப்போகும் பிள்ளைகளுக்கும், பிள்ளையைப் பெற்றவர்களுக்கும் தக்ஷிணை வாங்கும் அல்ப புத்தியை மட்டும் கொடுக்காது ரக்ஷித்துவிட்டால் போதுமல்லவா!

லக்ஷ்மீ! ஒரு அதிசயமான விவாகத்தைப்பற்றி எழுதுவதாகச் சென்ற கடிதத்தில் எழுதியது உனக்கு நினைவிருக்கலாம். அம்மாதிரி கல்யாணம் இக்கலியில் ஒன்றிரண்டாவது நடக்கிறதே என்று சந்தோஷப்படுகிறேன்.

அபார படிப்பும் அபரிமிதமான அழகும் செல்வாக்கும் சிறப்பும் மிக்க குடும்பத்தில் பிறந்த தனிப்பெருமை சகலமும் பொருந்திய வாலிபன் மேல் நாட்டிற்குப் படிக்கச் சென்றிருந்தானாம். ஏற்கனவே அவன் படித்துள்ள படிப்பிற்கு 10 ஆயிரம் வரையில் வரதக்ஷிணை வாங்கலாமாம். மேல்நாடு

மணவாளனிடம் காதலால் இருக்கலாம் என்றாலோ, ரத்தினம் தானாகவே விரும்பி மக்களிடம் செல்லுமா? மக்களல்லவோ அதை விரும்பித் தேடிச் செல்வார்கள்? நீ பெருமூச்சு விடுவதை நோக்கினால் உனக்கு அந்தக் குறைதான் என்று தோன்றுகின்றது. ஆனால் நீ விரும்பியும் உன்னைப் பொருட்படுத்தாத நாயகனும் இருக்கிறானா?

நீ ஆபரணங்கள் அணிந்துகொள்ளாமல் சடைகள் தாங்கி இருப்பதை நோக்கும் அவன் மனம் கன் மனமென்றே கூற வேண்டும். காற்றால் உலர்ந்து வெய்யிலால் வாடியிருக்கும் உன் திருமேனியைக் கண்டாலே மனம் வருந்தாமலிருக்கமுடியுமா? அப்படி யாராவதிருந்தால் அவனை கர்வமுடையவன் என்றே நினைக்க வேண்டும். என்னுடைய தவத்திலும் பாதியை உனக்குத் தருகின்றேன். உன் எண்ணம் நிறைவேறும்; அதைத் தெளிவாகக் கூறும்படி வேண்டிக்கொள்ளுகின்றேன்." (தொடரும்)

சென்று திரும்பி வரும் வாய்ப்பு கிடைத்துவிட்டதால் இனி கேட்க வேண்டுமா! பெற்றோர்கள் வரதக்ஷிணை 15 ஆயிரம் ரொக்கமாகவும், 10 ஆயிரத்தில் ஒரு மோட்டாரும், 10 ஆயிரத்திற்கு இரும்புப் பெட்டி உள்பட சீர்வகைகளும், 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட நகைகளும், கல்யாணச் செலவுகள் பூராவும் பெண் வீட்டைச் சேர்ந்தது என்றும், ஒரு அரை லக்ஷத்திற்குச் சகல திட்டமும் பெற்றோர்கள் செய்து முடித்து விட்டுப் பையனின் வருகைக்காக எதிர்பார்த்திருந்தார்கள்.

பெண்ணும் M.S.C. படித்தவள். சாதாரண அழகுடையவள்தான். பிள்ளையாண்டான் ஏரோப்ளேனில் வந்து இறங்கும்போதே பெண்ணையும் கூடவே அழைத்துச் சென்று வரவேற்றார்களாம் பிள்ளையின் பெற்றோர்கள். கடிதத்தில் எழுதிய நங்கை இவள்தான் என்று அறிமுகமும் செய்து வைத்தார்களாம்.

வீட்டில் ஒரே அமர்க்களம். விருந்தும் வருவார் போவார் உபசரணைகளும் சொல்லி முடியாது. ப்ளேனில் வந்த அலுப்புக்கூட ஆறவிடவில்லை. இதற்கிடையில் பெண்ணின் தகப்பனார் தடபுடல் உபசாரத்துடன் பலவித கார்களை வாசலில் கொண்டு நிறுத்திவிட்டு எது வேண்டும் என்று ஆரம்பித்தாராம். முகூர்த்தம் வைக்கவும் ஏற்பாடு செய்து பேசுகையில் பையன் சிரித்துக்கொண்டே....மன்னிக்கணும் எனக்கு விவாகமாகிவிட்டது என்று வெடிகுண்டு வீசுவதுபோல் சொல்வதைக் கேட்டுத் தீயை மிதித்தவர்கள்போல் துள்ளினார்கள். ஏதோ கதையிலும் நாடகத்திலும் பார்ப்பது போலும் படிப்பதுபோலும் இருந்ததேயன்றி நிஜமாகத் தோன்றவே இல்லையாம். எல்லோரையும்விட பிள்ளையைப் பெற்றவளுக்குத்தான் இடி இடித்ததுபோலிருந்த அதிர்ச்சியில் மயக்கமே வந்துவிட்டதாம்.

வாயில் வந்தவாறெல்லாம் மகனைத் திட்டியதோடு சீமைக்குப் போனால் எவரும் இத்தகைய மோசமானச் செயலுடன் தான் திரும்புகிறார்கள் என்று கேள்விப்பட்டது எனக்குமா ஆய்விட்டது என்று கத்தினார்களாம். இதற்குமேல் கேட்க வேண்டுமா! ஒரே அலங்கோலமென்றால் மிகையாகாது. பெண்ணைச் சேர்ந்தவர்கள் சண்டையும் பூசலுமாகப் போய் விட்டார்களாம்.

லக்ஷ்மீ! வீணாக வளர்த்தவில்லை. கதைகளில் நடப்பதை விட அதிசயமான விசித்திரங்கள் உலகில் நடக்கிறது என்பதை விவரிக்கவே இதை எழுதுகிறேன்.

உண்மையில் கல்யாணமாகவில்லை, அவ்வாறு சொல்லி அந்த இடத்தைத் தட்டிக் கழிக்கவே அப்படிச் செய்தானாம். ஆதியில் இவனுக்குப் பள்ளிக்கூட வாத்யாராகவும், ப்ரைவேட் வாத்யாராகவும் இருந்து இவனுக்குக் கல்வியைக் கரைத்து

ஊட்டி இந்த நிலைமைக்குக் கொண்டுவந்த உபாத்யாயரை அவன் தெய்வமாகப் பாவித்துப் போற்றி வந்தானாம். உபாத்யாயருக்கு ஒரு பெண். மிக்க லக்ஷணமாயும் புத்திசாலியாயுமிருப்பவள். அவளும் நன்றாகப் படித்துத் தேறி உபாத்யாயினியாகவே இருக்கிறாள். உபாத்யாயருக்குத் தான் செய்யும் பேருபகாரமும் ப்ரதிபலனுமாகக் காலணா வரதக்ஷிணை வாங்காமல் உபாத்யாயர் பெண் உபாத்யாயினியை வெகு எளிய முறையில் மணந்துகொண்ட காட்சியைத்தான் நான் உனக்கு விவரித்து எழுதுவதாகச் சொன்னேன். முதலில் பெற்றோர் விரோதமாக இருந்தார்களாம். பிறகு ஒருவாறு சரியாகி விட்டதாம். இப்படி ஒவ்வொரு வாலிபனும் செய்தால் எப்படித்தான் நம் நாடும் சமூகமும் வளம் பெறாதிருக்கும்? இத்தகைய கல்யாணத்தை நான் நேரில் பார்க்கக் கிடைக்கவில்லை. என் சிநேகிதை நேரில் பார்த்ததைத் தெரிவித்தாள்; எனக்கும் ஆச்சரியமாயிருந்தது உடனே உனக்குஎழுதினேன்.

லக்ஷ்மீ! நான் காடியாகக் கத்துவது ஒருபக்கமிருக்கட்டும். வடநாட்டில் ஏதோ ஊரில் வரதக்ஷிணை வாங்கும் பிள்ளை வீட்டாருக்கும் பிள்ளைக்கும் கடுங்காவல் தண்டனையும் அபராதமும் விதிப்பதாகச் சட்டமாகவே செய்திருப்பதாகப் பத்திரிகையில் படித்துப் பூரித்தேன். ஒவ்வொரு சர்க்காரிலும் இம்மாதிரி சட்டங்கள் மூலமாகவே இந்தப் பிசாசை விரட்டிவிட முன் வந்து விட்டால் பகவான் அவதாரம் எடுக்காமலேயே விரட்டி விடலாமல்லவா?

லக்ஷ்மீ! எக்ஸிபிஷனைப்பற்றிக் கேட்டிருக்கிறாய். அதைப் பற்றிச் சொல்வதற்குமுன்பு எக்ஸிபிஷன் கமிட்டித்தலைவியான ஸ்ரீமதி M. A. ரங்கநாயகியம்மாளின் திறமையும் அன்பும் உழைப்பின் ஆர்வத்தையும் முதலில் சொல்ல வேண்டும். தலைவி என்றால் எப்படி இருந்து எப்படி நடத்த வேண்டும் என்பதை நிதர்சனமாகக் காட்டி விட்டார். தேகநலம் குறைந்திருக்கையிலுங்கூட ஓடிஓடி சிறியவர்களைப்போல் உத்ஸாகமாய் உழைத்தது குறிப்பிடத் தக்கதாகும். சங்கத்தின் உபதலைவி ஸ்ரீமதி M. O. ஜானகியம்மாள் உள்பட அவருடைய குடும்பமே இந்தப் பொருள்காட்சியின் சிறப்பை அதிகரிக்கச் செய்து உழைத்த ஆநந்தத்தைப் பார்த்தால்தான் தெரியும். அவர்களும் அவர்களுடைய நாட்டுப் பெண்களும் இதையொரு பொருட் காட்சி என்றே நினைக்காமல் தம்முடைய வீட்டுக் கல்யாணம் என்கிற அபரிமிதமான உத்ஸாகத்துடன் பாடுபட்டது போற்றத் தக்கது. தவிர புஷ்பம்மாள், M. C. ஜானகியம்மாள், A. ஸரோஜாபாய், விட்டலாபாய், தங்கம்மாள், பத்மினிஸ்ரீனிவாசன், ஜி. ஆர். ஜெயலக்ஷ்மி, ரங்கநாயகி, G. P கமலா, துளஸி, வத்ஸலா, E. ஸ்ரீனிவாஸம

மாள், சுகந்தா, ரங்கநாயகி, M. A. ராதா, கிதையம்மாள், M. O. கமலா, அமேலா, அலமேலா முதலியவர்கள் ப்ரத்யேக அன்புடன் பம்பரம்போல் சுற்றிச்சுற்றி ஸேவை செய்த அழகும் வரும் விருந்தினருக்கு விஷயத்தை விவரமாக எடுத்துச் சொல்லி விளக்கிய விமரிசனமும் சொல்லமுடியாத அழகாயிருந்தது. இரண்டு 'வாண்டுப் பயல்கள்' சி. பாபு, சி. கஸ்தூரி இருவரும் விளையாட்டுப் பகுதியில் கரைகாணுத உத்ஸாகத்துடன் ஆடவர், பெண்டிர் இருவரையும் வசிகரத்துடன் கூவியழைத்து விளையாடச் செய்த காட்சியையே பார்த்துக்கொண்டு இருக்கலாம்போல் தோன்றியது. விளையாட்டுப் பக்கத்தில் சிறுவர்களும் சிறுமிகளும் குதூகலிப்பதுபோல் உண்டி, திண்டி, லக்கிடிப்பு முதலிய இடங்களில் பழுத்த பழங்கள்போல் கிழங்கள் அமர்ந்து அபாரமான உத்ஸாகத்துடன் பண்ணிபுரிந்த ஆநந்தத்தை எழுதியே முடியாது; எத்தனை தான் நான் எழுதினுலும் நீ நேரில் பார்ப்பது போலாகுமா? பிழைத்துக் கிடந்தால் அடுத்த தடவை நீ கட்டாயம் வந்து பங்கெடுத்துக் கொள்ளு, பொருள் காட்சியைப் பற்றிய புகழ்மாலையைப் படித்தால் உனக்கு விளங்கும்.

இங்ஙனம்,

மாமி.

உதிர்ந்தமலர்கள் — (வை. மு. கோ.)

1. தாய்மைப் பீடத்தை ஆரோகணிக்க ஆசைக்கொள்ளாத பெண்களே இல்லை, ஆனுல் தான் சேயாக இருந்த நாளைமட்டும் நினைப்பதே இல்லை.

2. கடன் கேட்கும்போது இருக்கும் கனிவும் பரிவும் நாணயமும் பல வருஷங்கள் கழித்துக் கடனைத் திருப்பிக் கேட்டுக் கொடுக்கும்போது மாறிப்போய் கசப்பும் வெறுப்பும் மனஸ்தாபமுமாக ஆகிவிடுகிறது. உலகமே இவ்வளவுதான்.

3. யாருமே பிறர் மனம் நோகும்படிப் பேசிவிடுவதும் செய்துவிடுவதும் வெகு எளிது; ஆனுல் பிறரில் ஒருவரை யாவது மனங்கோணுமல் களிக்கும்படிக்கு த்ருப்தி செய்வது மிகமிக அரிது.

4. நாணயத்தை மீறி மயவஞ்சகம் செய்துவிடும் எவரும் பிறகு வாழ்க்கையில் நாணயத்தைக் கனவிலும நாடமுடியாத நிலைமைக்கே வந்துவிடுகிருர்கள்; இதுவே தண்டனைபோலும்

மஹாத்மாஜி ஸேவா சங்கம்

பொருட் காட்சி

கலைச்செல்வத்தின் பொக்கிஷம்

எங்கள் மகாத்மாஜி சேவா சங்கத்தின் அதிசயப் பொருள் காட்சியைப்பற்றிச் சொல்ல நான மிகவும் பெருமைப்படுகிறேன். உலகத்தில் பகவானின் சிருஷ்டி விசித்திரங்களைப்போல் பலவித கலை விசித்திரங்களும் நிறைந்து இருக்கின்றன. அதை எல்லாம் வெளிப்படுத்தத்தான் சந்தர்ப்பம ஏற்படுத்த வேண்டும். அதற்காகவே அடிக்கடி ஜனங்கள் கேட்டும் பார்த்தும் மகிழ பாட்டுக் கச்சேரிகளும், நாட்டியக் கச்சேரிகளும் நடத்துகிறார்கள். இதனால் அவர்களின் கலையும் விருத்தி அடைகிறது. எப்படி மழைத் தண்ணீர் அங்கு அங்கு சிதறியிருப்பதைவிட ஒரே இடத்தில் குளமாகவோ ஏரியாகவோ இருந்தால் பார்ப்பதற்கு அழகு தருகிறதோ அதுபோல் ஒரு கலையை ஒரு இடத்தில் அநேகர் பார்த்து மகிழ்வதுதான் விசேஷம், ஆனந்தம். வீட்டு வேலைகள் மத்தியில் ஒழிந்த சிறிது நேரத்தையும் வீணாக்காமல் பெண்களாலேயே கையால் செய்யப்பட்ட கைவேலைகளைக் கண்காட்சியாக வைக்க வேண்டுமென்று தீர்மானித்த மகாத்மாஜி சேவா சங்கத்து சகோதரிகள் வெகு உற்சாகமாகவும் அக்கறையுடனும் அலைந்து திரிந்து பல அருமையான பொருள்களைச் சேர்த்து திருவல்லிக்கேணி வெங்கடரங்கம் பிள்ளை தெருவில் இருக்கும் வஸந்த பங்களாவில் வைத்திருந்தார்கள்.

பலவித புஷ்ப செடிகளாலும், குளிர்ந்த நிழல் தரும் அழகிய மரங்களாலும் சூழ்ந்த சோலையின் மத்தியில் இருக்கும் அழகிய மண்டபத்துக்குள பகவானின படங்களின மத்தியில் வைக்கப்பட்ட பொருள்கள் ஜகத்ஜோதியாக விளங்கியது.

மைதிலி ஸ்ரீநிவாஸனும, ஜி.பி.கமலாவும் ப்ரார்த்தனை கீதம் பாடியதும் அடையார் ஸ்ரீமதி ருக்மிணி தேவி அவர்கள் (12-8-'55) மாலை 6மணிக்குப் பொருள்காட்சியைத் திறந்துவைத்தார். அவரை வரவேற்க மகாத்மாஜி சேவா சங்கத்து மாணவிகள் பல ஜாதி வேஷங்களால் அலங்கரித்துக்கொண்டு "ஆந்தமிகுந்த கலாக்ஷேத்ர அன்னை வருகவே" என்று பாடி அவருக்கு மாலை அணிவித்து வரவேற்றார்கள். பொருள் காட்சியின தலைவி ஸ்ரீமதி ரங்கநாயகி அம்மாள் அவர்கள் ருக்மிணி தேவிக்கு வரவேற்பு தரும்போது கலையின் அவதாரமாகிய ருக்மிணி தேவி அவர்கள வந்து இந்தப் பொருள் காட்சியைத் திறந்து வைத்தது தனக்கு ரொம்ப சந்தோஷமென்றும், கலைகளை ரஸிக்கக்கூடிய திறமை அவரிடம் இருக்கிறதென்றும், இச்சங்கத்தின் அதிர்ஷ்டமதான அவருடைய வருகைக்குக் காரணம் என்றும் மிக அழகாகப் பேசினார். உள்ளே தங்களை வரவேற்க ஆசிர்வாதத்தின கையுடன காத்து நிற்கும் காந்திஜி, கஸ்தூரிபாய் உருவங்களைப் பார்வையிட்டு ருக்மிணி தேவி அவர்கள் உள்ளே சென்று அழகாகவும் பொருத்தமாகவும் வைக்கப்பட்டு இருந்த [illegible] பார்த்து "அப்பாடா எத்தனை அழகாக அரெ[illegible]" என்று ஆச்சர்யப்பட்டார். ஒவ்வொ[illegible] வெகு சிரத்தை[illegible]

1—9—55
183194

கவனித்துப் பார்த்து மகிழ்ந்த பிறகு மிக உற்சாகமாக அதன் அருமை பெருமைகளை விளக்கி மிக அழகாகப் பேசினர். அவர் கூறியதாவது:

எத்தனைக்கெத்தனை வெளி தேசங்களைச் சுற்றினேனே அத்தனைக்கத்தனை இந்தியாவின்மீதும், தெய்வ பக்தி நிறைந்த இந்திய மக்களின்மீதும் அபிமானமும் பற்றும் அதிகமாயிற்று. இதை நான் ஹிருதயபூர்வகமாகச் சொல்லுகிறேன். இந்தியப் பெண்மணிகளின் நல்ல குணமும், பழக்க வழக்கங்களே அவர்களின் முகத்துக்கு அழகையும், தேஜஸையும் கொடுக்கிறது என்று அவர் சொன்னபொழுது வேறே எதிலும் திறமை இல்லாவிட்டாலும் இந்திய மக்களாகவாவது பிறக்கும் வாத்தைப் பெற்று வந்தோமே என்று மிகப்பெருமை அடைந்தோம். தன்னை சேவா சங்கத்தில் அழைத்ததற்கு மிக சந்தோஷமென்றும், இந்த அழகான பொருள் காட்சியைப் பார்க்க சந்தர்ப்பம் ஏற்படுத்தியதற்குத்தானே !எங்களுக்கு வந்தனம் கூறுவதாகவும் சொன்னர்.

பிறகு ஸ்ரீமான் சுந்தரம் வெறும் வாயாலேயே மேளம் வாசித்துக் காட்டினர். தூர இருந்து கேட்பவர்கள் ஏதோ மேளக் கச்சேரிதான் நடக்கிறதென்று ஏமாந்து போவார்கள். அத்தனை தத்ரூபமாக இருந்தது. அடுத்தபடி ஸ்ரீமான் நாராயணசாமி என்பவர் ரேடியோவில் ஏற்படும் சப்தங்களும், ஏரோப்ளேன் போகும்போது சப்தமிடுவதையும், காந்திஜி, நேரு பேசுவதைப் போலவும் அப்படியே பண்ணிக் காட்டினர். சிரித்துச் சிரித்து எல்லோருக்கும் ஒரே குதூகலமாக இருந்தது. குமாரி வஸந்தி, ஜானகி என்ற இரு சிறுமிகள் குறவன், குறத்தி நாட்டியம் ஆடினர்கள். பக்கவாத்யத்தின் கலாட்டாவும், மேக்-அப் ஆர்ப்பாட்டங்களும் இல்லாமல் தன் இனிய குரலாலேயே பேசிப்பாடி மகிழ்வித்தார்கள். ஜகன்மோகினி ஆசிரியை அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு அன்றைய நிகழ்ச்சி விமரிசையாக முடிவுற்றது.

மற்றைய இரண்டு நாளும் திரள் திரளாக ஜனங்கள் வந்து பொருள் காட்சியைக் கண்டு களித்தார்கள். உள்ளே போகும் முன்பே பலவித தின்பண்டங்களால் வயிற்றுக்கு விருந்தும், உள்ளே பார்த்து மகிழ கண்களுக்கு விருந்தும், சந்தோஷத்தினல் மனதிற்கு விருந்துமாக இருந்தது.

சனிக்கிழமை அதாவது 13-8-'55-ந்தேதி மத்யானம் ஸ்ரீமதி இந்திரா ராமதுரை, ஆனந்தி ராமசந்திரன், ராஜாமணி கோவிந்தாசாரி, ஜெயம்மாள் இவர்களெல்லாம் நீதிபதிகளாக இருந்து எல்லாப் பொருள்களையும் நன்ருகப் பார்வையிட்டு தகுந்த கை வேலைகளுக்கு பெரியவர்களில் 3 பேருக்கும், சிறுவர்களில் 3 பேருக்கும், அபிமான பரிசு 2 பேர்களுக்கும் கொடுக்கலாம் என்று தீர்மானித்தார்கள். அவர்களின் அபிப்பிராயம் மிகப்பொருத்தமாக இருந்தது.

மண்டபத்தின் உள்ளே போகும் முன்பே ராதா கிருஷ்ணனின் விக்ரகம் நம்மை அன்புடன் வரவேற்றது. அடுத்தபடியாக மகாத்மா காந்தியின் உருவமும், ஸ்ரீமதி கஸ்தூரிபாயின் சாந்தமான முகமும் நம்மை ஆசீர்வதித்தது. அதன் அருகில்

நின்றிருந்த பெரிய அம்மையார் சங்கத்தின் உபதலைவி புஷ்பம்மாள் அவர்கள் தன் கையில் இருந்த உண்டியைக் குலுக்கிய பொழுது நம்மிடம் 100 ரூபாய் இருந்தாலும் அதில் போட்டு விடலாம். இந்த அம்மாளின் அன்புக்கு இது ஈடாகாது என்று தோன்றியது.

நேர் எதிரே வைக்கப்பட்டு அநேகவித மணிவேலைகள் செய்து இருந்த லக்ஷ்மி, சரஸ்வதி, பராசக்தி படங்கள் ஒருவித பக்தியை உண்டாக்கின. அந்தப் படங்களுக்கு அலங்கரிக்கப்பட்டிருந்த காகித பாரிஜாத பூமாலை எல்லாரையும் நிஜ பாரிஜாதம் என்றே ஏமாற்றிவிட்டது. மீன சிதழினால் மிக அழகாக நரி திராக்ஷைப் பழக்கதையைப் படம் தயார் பண்ணி இருந்தாள் ஒரு சகோதரி. காகிதத்தினால் பெரிய கோட்டையும், உடைந்த சிலேட்டின் சட்டங்களும், டைப் மிஷினின் ரிப்பன் சக்கரங்களும், சோடாமூடி, மாங்கொட்டைபோன்ற பொருள்களையும் வைத்து தயாரிக்கப்பட்டரதம் கம்பீரமாக விளங்கியது. தையல்காரனிடம் விணாக் கிடக்கும் துணிக் கந்தைகளை எல்லாம் சேகரித்து ஒரு அழகிய Feather Bag பல பக்ஷிகளின் இறகால் செய்யப்பட்டதுபோல் மிக நேர்த்தியாக இருந்தது.

பிரம்பினால் செய்த மோட்டார் கார், மயில் எல்லாம் விற்பதா விலைக்குக் கொடுக்கிறீர்களா? என்று எல்லோரும் மிக ஆவலாக விசாரித்தார்கள். பல அழகிய பைகளும், மேஜை விரிப்புகளும், பணப்பைகளும், Dr. கமலா ரங்காசாரி வீட்டவர்களால் சங்கத்துக்கு நன்கொடையாகக் கொடுக்கப்பட்டு இருந்தது. அதில் யாராவது ஏதாவது வாங்கும் பணத்தை சங்கத்துக்குச் சேர்த்துக்கொள்ளச் சொல்லி, கொடுத்து இருந்தார்கள். இழிந்த டர்கி டவல், மில்டரி டவல்களினால் நாய், பூனை, முயல் எல்லாம் செய்து வைத்து இருந்தார்கள். ஜப்பான் குடையைப்போல் பலவித வர்ண துணிகளால் அழகாகக் கோர்க்கப்பட்டு தைத்திருந்த குடை எல்லார் கவனத்தையுங் கவர்ந்தது. இன்னும் அநேக மேஜை விரிப்புகள், சோபா கவர்கள், பைகள் போட இடம் இல்லாமல் அங்கும் இங்கும் மாட்டப்பட்டு இருந்தன. பம்பாயிலிருந்து மிக அக்கரையுடன் ஒரு சகோதரியினால் அனுப்பப்பட்டு இருந்த ஒரு படமானது வெறும் தேங்காய் நாரினாலும், துடைப்பக் குச்சியினாலும் செய்யப்பட்டு மிக ரம்யமாக விளங்கியது. அதற்கு முதல் பரிசு வந்ததில் ஆச்சர்யம் ஒன்றும் இல்லை. அதே சகோதரியினால் செய்யப்பட்ட அநேக படங்கள், தலைமயிரினால் காந்திஜி, வெறும் பட்டு நூலினால் இயற்கை அழகுப் படம், வெறும் ஏலக்காய்த் தோலினால் செய்யப்பட்டிருந்த இரண்டு கிளிகள் படம் நம் ஆச்சர்யத்தை அதிகப்படுத்தின. எதைப் பார்த்தோம் எதைப் பார்க்கவில்லை என்று தீர்மானிக்க முடியாமல் இருந்தது அங்கிருந்த பொருள்கள். புடவை வாங்கி அதில் சரிகையினால் அழகாகக் கோடுகளும், பூக்களும் நெய்து இருந்தாள் ஒரு சகோதரி. பலவித நெக்லெஸ்களும், மாலைகளும் விசித்திரமான வேலைப்பாட்டுடன் செய்யப்பட்டு இருந்தது. சாக்லேட் பேப்பரினால் மயிலும் மானும் செய்து படமாக்கப்பட்டு இருந்தது. முழுவதும் துடைப்பக்குச்சியினாலேயே பிணைக்கப்பட்ட பங்களா

நம்மை இந்த மாதிரியில் வீடு கட்டிக்கொள்ளும்படி ஆசையூட்டியது.

எல்லாவற்றிற்கும் தலைசிறந்ததாகவும் நடுநாயகமாகவும் விளங்கியது சேவாக்ராமம். முழுவதும் கைவேலையினாலேயே பொம்மைகள், வண்டி, கட்டில், பலகை, போர்டு, பள்ளிக்கூட வாத்தியார், ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுபவர், கேட்பவர்கள் எல்லாம் சைபட மைசூரிலிருந்துவந்து ஒருஅம்மையார் செய்து கொடுத்ததுமல்லாமல் 4 நாள் முழுவதும் எல்லா வேலைகளையும் கவனித்துக்கொண்டு தன் உடல்நிலை சரியாய் இல்லாவிட்டாலும் பொருட்படுத்தாமல் பொருள் காட்சிகுத் தலைமைவகித்து வெகு சந்தோஷமாக நடத்திக் கொடுத்தார். அவர்களின் குடும்பம் முழுவதும் இதற்கு ஒத்து உழைத்தனர். அவர் செய்ததைப் போலவே பல பெரிய தாய்மார்களும் தங்கள் தங்கள் வேலையைச் செய்ததானது சிறு பெண்மணிகளுக்கு சோம்பலைவிட்டு இப்படி இருக்க வேண்டுமென்று சொல்லி இருக்கும் ஒரு படிப்பினையாக இருந்தது.

உமியினால் செய்த கால்மெரி (கார்பெட்டை) உள்ளே வந்த அநேகர் நிஜ கார்பெட் என்று அதன் மேல் கால் வைத்து காலில் உமி ஒட்டிய பிறகு அது நிஜமல்ல என்று ஏமாந்தனர். இதைப் பார்த்து நின்ற அநேகருக்குச் சிரிப்பை மறைக்க முடியாமல் தவித்தனர். 20 வயதுக்குள்பட்ட சிறுவர்களால் அநேக படங்கள் வரையப்பட்டும், பொம்மைகள் செய்யப்பட்டும் வைத்திருந்தது. அதில் சாக்பீஸ் (சிமை சுண்ணும்பு) செய்த சங்கிலிகள் பலவிதமாக தொங்கிய அழகு சொல்லி சாத்யமல்ல. மற்றும் பீச்சில் கிடக்கும் கிளிஞ்சலினால் செய்யப்பட்ட லேடியும், அவள் (Hand Bag) கைபையும் மிக நன்ருக செய்யப்பட்டு இருந்தது. பழைய துணிகளால் செய்த ரத்ன கம்பளம் அதன் பெருமையை விளக்கியது.

இத்தனையும் பார்த்துவிட்டு வெளியில் வந்தவுடன் அநேக சிறுமிகள் தாங்கள் தையல் க்ளாஸில் செய்த அநேகவித அழகிய துணிகளை எடுத்துக் காட்டினர். அந்த அழகிய வேலைப்பாடுகளைப் பார்த்து நிறைய வாங்கிக்கொண்டனர். அதை எல்லாம் விற்பதற்கு அந்த சகோதரிகள் காட்டிய ஆர்வமும் சந்தோஷமுமானது இந்த சங்கத்தின்பால் அவர்கள் கொண்டிருக்கும் பற்றுதலையும் அபிமானமும் சேர்ந்து இச்சங்கத்தை எப்படியாவது நல்ல நிலைமைக்குக் கொண்டுவர வேண்டும். இப்படியே ஏழையாக விட்டு விடக் கூடாது என்று அவர்கள் தீர்மானித்து இருந்ததுபோல் விளங்கின.

வெளியே விளையாட்டுப் போட்டிகள் அநேகம் வைக்கப்பட்டு இருந்தது. வருபவர்கள் ஆட உற்சாகமூட்டிய இரு சிறுவர்கள் மிக சுருசுருப்பாகவும், அநேகவித வேடிக்கைகளைக் காட்டி வந்தவர்களை மகிழ்வித்தார்கள், 15-ந்தேதி சுதந்தர தினம் காலை 9 மணிக்கு ஹிந்தி வகுப்பு உபாத்யாயினி Y சரஸ்வதி அவர்களால் கொடி ஏற்றப்பட்டது. அச்சமயம் எல்லா சகோதரிகளும் ஒற்றுமையுடனும் பக்தியுடனும் அந்தக் கொடியைச் சுற்றி வந்து வணங்கியபொழுது மானத்திலிருந்து ஒன்று இரண்டு துளிகளாக விழுந்துகொண்டிருந்த தூரலானது மகாத்மாவின் ஆனந்த

பாஷ்பமோ என்று நினைக்கும்படியாக இருந்தது. Y. சரஸ்வதி அவர்கள் இரண்டாவது 5 வருஷத் திட்டத்தைப்பற்றி அழகாகப் பேசினார். சாயங்காலம் 6 மணிக்குக் கனகம்கோபால் அவர்கள் தலைமையில்பொதுக்கூட்டம்நடந்தது. மாம்பலத்தில் ஒரு சங்கத்தைத் திறமையாக நடத்தும் அச்சகோதரி மிக அமைதியாகவும் பொருத்தமாகவும் பேசினார், பிறகு பல சகோதரிகள் பேசினார்கள். ஜனகனமன பாடப்பட்டு அன்று விழா முடிவுற்றது. 16-8-'55 மாலை 6 மணிக்கு கனகம்மாள் ஜகந்நாதாசாரி (இதை அம்மாள்) அவர்களின் தலைமையில் பரிசளிப்பு விழா நடந்தது.

முதல் பரிசுகள் ஸேவா கிராமம். ஸரஸ்வதி செய்திருந்த M. A. ரங்கநாயகியம்மாளுக்கும் ஏலக்காய்த் தோலிலும் தேங்காய் நாரும் குச்சியும்கொண்டு வர்ண ஜாலங்களுடன் செய்திருந்த படத்திற்கு வேதம்ஸ்ரீனிவாஸனுக்கும் சமமாகக் கொடுக்கப்பட்டது.

இரண்டாவது பரிசு பிரம்பு வேலைகள் மோட்டார் மயில், முதலியவைகள் செய்திருந்த கண்ணம்மாள் ராஜகோபாலனுக்கும் மெழுக்கிலை் பழவகைகள் செய்திருந்த ரத்னலால் அவர்களுக்கும் சமமாகக் கொடுக்கப்பட்டது.

மூன்றாவது பரிசு சங்கத்துத் தையல் வகுப்பில் அத்புதமாகத் தயாராயிருந்த தாமரைப் புஷ்பம் போன்ற க்ரோஷியா சவுக்கத்திற்கும் அளிக்கப்பட்டது.

அபிமானப் பரிசுகள் துடைப்பக்குச்சி பங்களா செய்த சுசீலாவுக்கும் சோடாமூடி ரதம் விறகுக்கட்டை பாம்பு செய்திருந்த T. V. ஜானகி விஜயராகவனுக்கும் கொடுக்கப்பட்டது. இன்னும் பல அரிய சாமான்களுக்குப் பாராட்டுப் பத்திரங்கள் வழங்கப்பட்டது.

சிறுவர்களில் ரத்தினகம்பளம், கோழிமுட்டை பொம்மை, சாக்கு சங்கிலி செய்த குமாரி ரமா, வஸந்தி, ம்ருநாளினி ஆகிய மூவருக்கும் முறையே 3 பரிசுகள் அளிக்கப்பட்டன.

ஒரு கல்யாண வீட்டின் கொண்டாட்டத்தைப்போல் இருந்தது எல்லா சகோதரிகளுக்கும். ஆடிப்பாடிப் பேசி, சிரித்து 4 நாளும் நாலு நிமிஷமாகக் கழிந்தது. நமக்கு இடம் கொடுத்து உதவிய செட்டியார் அவர்களின் குடும்பத்துக்கும், குறைந்த செலவில் ஒலிபெருக்கி கொடுத்து உதவிய குடும்பத்தார்களுக்கும், அங்கே பொருள்களைக் கொடுத்து உதவியவர்களுக்கும், அதன் விஷயங்களை விளக்கி உதவிய அநேக சகோதரிகளுக்கும், லக்கிடிப்புக்காக சாமான்கள் உதவிய புஷ்பம்மா. கண்ணம்மா இருவருக்கும், பக்ஷணங்கள் செய்து உதவிய K. R. ரங்கநாயகி, M. O. ஜானகியம்மாள் குடும்பத்தார், ஸ்ரீநிவாஸம்மாள், இதையம்மாள், வை. மு. கோ, ஸரோஜா முதலியவர்களுக்கும், தள்ளாத வயதையும் உடல் நிலையையும் பொருட்படுத்தாது வந்து அநேக கஷ்ட வேலைகளை ஆசையுடன் செய்து முடித்த தாய்மார்களுக்கும், வந்தனத்தைச் செலுத்துகிறேன். இப்படியே ஒவ்வொரு வருஷமும் எல்லா சகோதரிகளும் முன்வந்து இறைவனின் அனுக்ரஹமும், மகாத்மாவின் ஆசீர்வாதமும் எல்லாருக்கும் பெருகட்டும்

A. சரோஜாபாய்.

பொருள் காட்சிக்குப் புகழ்மாலை
பொதுமக்கள் சூட்டுகிறார்கள்.

மகாத்மாஜி சேவா சங்கத்தில் நம் ஸ்திரீகள் செய்யும் அரிய வேலைகளைக்கொண்டு ஏற்படுத்தியிருக்கும் பொருள் காட்சியைக் காண மிகவும் இன்பமாக இருக்கிறது. இந்த உற்சாகமுள்ள வேலைகளைக் காண்பதற்கு மிகவும் பெருமையாக இருக்கிறது. இச்சங்கத்தின் திறமை மேலும் மேலும் ஓங்கி வளரும்படி நான் விரும்புகிறேன். சங்கத்தின் அங்கத்தினர்களையும் அவர்களுடைய அற்புதமான வேலைத்திறனுக்காகவும் வாழ்த்துகிறேன்.

ருக்மிணி தேவி,
தலைவி கலாக்ஷேத்திரம்.

பொருள் காட்சி மிகவும் அருமையாக இருக்கிறது.

M. A. ஸ்ரீநிவாஸன், M. R. ராஜகோபாலன்.

பொருள் காட்சியில் வைத்திருக்கும் சாமான்கள் செய்தவருடைய கைத்திறனையும், கலையிலிருக்கும் ஆர்வத்தையும் எடுத்துக் காட்டுகிறது.

S. T. கிருஷ்ணமாச்சாரி.
ஆந்திரா யூனிவர்ஸிடி. 12—8—'55

இந்தப் பொருள் காக்ஷி ஊக்கத்தினாலும் ஒத்துழைப்பினாலும் ஏற்பட்டது. இதில் வைத்திருக்கும் கைவேலை சாமான்கள் மிகவும் அருமையாக இருக்கின்றன. மேலும் மேலும் வளர்ச்சியடையட்டும்.

M. பாலகிருஷ்ணன்.
13—8—'55, அட்வொகேட்.

சங்கத்தின் அங்கத்தினர்கள் செய்த கைவேலைப் பொருள் காட்சியைப் பார்க்க எனக்கு மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. இந்தச் சங்கம் எல்லாத்துறைகளிலும் வெற்றியடையும் என்பதில் ஐயமில்லை.

K. சுந்தரபாய்,
13—8—'55. தலைவி, மகிலசமாஜம், மதனபள்ளி.

நம் ஸ்திரீகளால் செய்யப்பட்ட கைவேலைகளைப் பார்க்க எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. எனக்கு இந்த அரிய பொருள் காட்சியைப் பார்க்கச் சந்தர்ப்பம் நேர்ந்ததைப்பற்றி மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

14—8—'55 B. K. S. Rao,
மதராஸ் மார்கெட் ஆபீஸர், U. K. ட்ரேட் கமிஷன்.

சங்கத்து அங்கத்தினர்களால் செய்யப்பட்ட கைவேலை பொருள் காட்சி என் கண்களுக்கு ஒரு விருந்தாக இருந்தது. நம் ஸ்திரீகளின் கற்பனா சக்தியும் ஊக்கத்தையும் காண மேலும் கலைவளர வசிகரம் உண்டு என்று என மனதில் ஊர்ஜிதமாகிறது. இப்பொருள் காட்சி இன்னும் மற்றவர்களுக்கு ஊக்கமும் கலைத் திறனும் உண்டு பண்ணும் என்று எனக்கு நிச்சயம் தெரியும்.

சங்கத்தின் வளர்ச்சிக்கு எல்லாவிதமான வெற்றியும் உண்டாகட்டும்.

Mrs. பத்மினி ராகவன்.
அட்வொகேட்,

மகாத்மாஜி சேவா சங்கத்தின் அங்கத்தினர்கள் நடத்திய கைவேலை பொருள் காட்சியைக் காண எனக்கு ஒரு அரிய சந்தர்ப்பம் கிடைத்ததுபற்றி மகிழ்ச்சி. இதனால் சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் ஊக்கமும் உற்சாகமும் உண்டாகும் என்பது நிச்சயம்.

C. P. ஸ்ரீநிவாஸராவ்,
செட்டில்மெண்ட் தாசில்தார்.

திருச்சி. 14—8—'55.

இப்பொருள் காட்சி அநேக ஸ்திரீகளிடத்து மறைந்திருந்த கலைத்திறனையும், சாமர்த்தியத்தையும் எடுத்துக்காட்ட சந்தர்ப்பம் அளித்திருக்கிறது. வருங்காலத்து கலை நிபுணர்களுக்கு இது அடிப்படையாக இருக்கிறது என்று நினைக்கிறேன். இதில் வைத்திருக்கும் சில சாமான்கள் கைத்திறனிலும், சாமர்த்தியத்திலும் நிகரில்லாததாக இருக்கின்றன. எனக்கு இப்பொருள் காட்சியைப் பார்க்க ஒரு அரிய சந்தர்ப்பம் கிடைத்ததுபற்றி மிகவும் சந்தோஷம்.

14—8—'55. M.R. அழகியசிங்கராச்சாரி.

சென்ற வருஷத்தில் வைத்திருந்த பொருள் காட்சியைவிட இந்த வருஷத்தில் வைத்திருக்கும் பொருள் காட்சி மிகச்சிறப்பாக இருக்கிறது. இந்தப் பொருள் காட்சி விசேஷமானதாகவும், மனதில் பதியும்படியானதாகவும், சுய அறிவு உடையதாகவும் இருக்கிறது. தன்னலமற்றவர்களாகவும் சோம்பல் இல்லாதவர்களுமாகிய இந்த மகத்தான வேலைகளைச் செய்த ஸ்திரீகளுக்கு என் வாழ்த்துக்கள். இந்தச் சங்கம் மேலும் மேலும் வளர்ந்து இன்னும் மறைந்து கிடக்கும் சாமர்த்தியங்களை முன்னுக்குக் கொண்டு வரட்டும்.

T. A. நரஸிம்மய்யங்கார், Exe. Engr.

இந்தப் பொருள் காட்சி மிகவும் விநோதமாக இருக்கிறது. மறைந்து கிடக்கும் கற்பனை சக்தியின் ஒலியை எடுத்துக் காட்டுகிறது.

சார்லு,
இஞ்சினியர்.

இது மிகவும் அற்புதமான கைவேலைப் பொருள் காட்சிகளில் ஒன்றாகும். இது நம் ஸ்திரீகளின் கற்பனை சக்தியையும், சேதமான பொருள்களை விணாக்காமல் உபயோகித்து மிகவும் அழகான பொருள்களை உண்டாக்கும் திறமையையும் காட்டுகிறது. இப்படிப் பட்ட பொருள் காட்சியை உற்சாகமூட்ட வேண்டும். கலையும், கலைத்திறனும் நம் ஸ்திரீகளிடத்தில் மறைந்து இருக்கிறது. அதற்கு உற்சாகமும், ஊக்கமும் அளித்து அவைகளை வெளியில் கொண்டுவர சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட வேண்டும்.

இந்திரா ராமதுரை.

இந்த மகத்தானதும் அருமையானதுமான பொருள் காட்சி வேண்டப்படாத வஸ்துக்களைக்கொண்டு எவ்வளவு அழகான வஸ்துக்கள் தயாரிக்கலாம் என்பதைக் காண மனிதர்களிடத்தும் ஸ்திரீகளிடத்துமுள்ள திறனைக் காட்டுகிறது. இந்த அற்பமான சாமான்களின் உபயோகத்தை நம் நாட்டு மக்கள் அறிந்தால் நம் நாடு இன்னும் மேன்மேலும் சிறப்புறும்.

V. V. ராமதுரை, அட்வகேட்.

இந்த வருடத்துப் பொருள் காட்சி சென்ற வருடத்தைவிட கலையிலும் கைவேலையிலும் மிகவும் நன்றாக இருக்கிறதென்பதைப் பார்க்க மிகவும் சந்தோஷமாக இருக்கிறது. சங்கம் இந்த கௌரவமான வேலையை மேன்மேலும் தொடர்ந்து செய்யட்டும்.

சர்மா.

பொருள் காட்சி மிகவும் அழகாக ஸ்திரீகளால் செய்யப்பட்டிருப்பதைக் காண எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. இதற்கு ஜனங்கள் உற்சாகமும் ஊக்கமும் அளிக்க வேண்டும்.

15—8—'55. ஹரிராவ்.

இந்த அருமையான கைவேலைப் பொருள்காட்சியை உற்சாகமளிக்க வேண்டும். பொருள் காட்சி மிகவும் நன்றாக அமைக்கப்பட்டிருந்தது குறித்து மகிழ்ச்சி.

கில்ஸன், லெக்சரர்—M. V. காலேஜ்.

ஸ்திரீகளுக்கு இயற்கையாயுள்ள கலைத்திறன் இந்தப் பொருள் காட்சியால் மிகவும் ஜோதியாய் விளங்குகிறது. மனிதனாகிய நான பொறுமையான, கஷ்டமான, அரிய வேலைப்பாடுகளை முன் வணங்குகிறேன். சங்கத்திற்கு என வாழ்த்துக்கள்.

V. M. சிவக்ஞானம். மிராசுதார், வளவனூர், S. A. Dt.

மகாத்மாஜி சேவாசங்கம் மாதர்களுக்கு ஒரு எடுத்துக் காட்டாக விளங்கிவருகிறது, எத்தனையோ சம்சாரிகளும், தாய்மார்களும் இதில் பங்கெடுத்துக்கொண்டு பணியாற்றி வருகிறார்கள். பெண்கள் தமது ஓய்வு நேரத்தை வீணாக்காமல அதே சமயத்தில் அதிகமாகப் பொருள் செலவழிக்காமல உபயோகமான கைவேலைகள் செய்து வருவதைப் பார்த்து ரொம்ப மகிழ்ச்சி அடைந்தேன. பொருட்காட்சியில் வைக்கப்பட்டிருந்த ஒவ்வொரு பொருளும் கண்ணையும் கருத்தையும் கவர்வதாக இருந்தது. அனைவருக்கும் என் அன்பு நிறைந்த வாழ்த்துக்கள். இந்த சேவாசங்கம மேன்மேலும வளர்ந்து சிறப்பாகப் பணிகள் பல புரியவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திக்கிறேன்,

ஆனந்தி ராமசந்திரன்.

நம் ஸ்திரீகள் தங்கள் குடும்பப் பொறுப்புகளிடையே இவ்வளவு அற்புதமான வேலைகளைச் செய்ய முடியுமென்பது இந்த பொருட்காட்சியைப் பார்த்த பிறகுதான தெரிநதது.

கே. எம். ரங்கசாமி.

உதவி ஆசிரியர், தினமணி, திருவல்லிக்கேணி.

இந்த அற்புதமான வேலைகளைக் கண்டு மிகவும் ஆச்சரியம் அடைந்தேன். நம் நாட்டுக் கலைகளை வளர்க்க இச்சங்கம் செய்துள்ள சேவை மிகவும் பாராட்டத் தக்கது. பகவான கிருபையால் இச்சங்கம் மேலும் மேலும் நம நாட்டுக் கலைகளை வளர்க்குமென்று நம்புகிறேன்.

சே. கோபாலன்.

அக்கவுண்ட்ஸ் டிபார்ட்மெண்ட், N. Rly.

ஸ்திரீகளால் செய்யபபட்ட மிகவும் கஷ்டமான வேலைகளைக் கண்டு நான் மிகவும் பாராட்டுகிறேன்.

T. S. ராமசந்திரன்.

45, ஆபீஸ் வெங்கடாசல முதலி தெரு, திருவல்லிக்கேணி.

V. சங்கரன் 44, O. V. M. தெரு, திருவல்லிக்கேணி.

இந்தப் பொருள் காட்சியைப் பார்த்து ஒரே இடத்தில் வெகு அரிய கை வேலைப்பாடுகளைக் காண எனக்கு மிகவும் திருப்திகரமாக இருக்கிறது. இந்த கைவேலைப்பாடுகள் மிகவும் அருமையானதாகவும் மனோகரமானதாகவும் இருக்கின்றன. இந்தப் பொருள் காட்சியை உற்சாகமூட்ட வேணடும். பெண்கள சிறு வயதிலிருந்தே தங்களுடைய திறமையை வெளிப்படுத்தி விருத்தியடைய பயிற்றுவிக்க வேண்டும்.

ஏ. பி ஸ்ரீநிவாஸாசாரியர்

25 தோடித் தெரு, திருவல்லிக்கேணி

[இவைபோல் பல.]

முக்கிய அறிவிப்பு:—பலவித அசௌகர்யங்கள் காரணமாக இவ்விதழில் கதைப்பகுதி குறைந்த பக்கங்களுடன் வெளியாகியிருக்கிறது. அடுத்த இதழில் அதிகப்படியான பக்கங்கள் வெளியாகும். கவனிக்கவும்.

அடுத்த இதழில் ஆரம்பம்

வை. மு. பத்மினி ஸ்ரீநிவாஸன் எழுதும் தொடர்கதை.

"ப்ரதிபிம்பம்"

எதிர்பாருங்கள்

மூளைக்கு வேலை

அடுத்த இதழில் உத்ஸாஹம், சுருசுருப்பு, வேடிக்கை, பொழுதுபோக்கு யாவும் கலந்த புதியபகுதி.

தெரிவியுங்கள்

"எமக்குப் பிடித்தது"

நேயர்களின் ஆதரவு எந்தெந்த பகுதிக்கு எப்படி இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறோம். வரிசை க்ரமமாக எழுதவும்.

ஆசிரியை.

ஜ—5 1—9—55

 ஸ்ரீமதி பத்மினி ஸ்ரீநிவாஸன்

ரகளை

லக்ஷ்மி:—என்னால் முடியவே முடியாது...

மீனு:—என்ன...முடியாதா! கட்டாயம் நான் சொல்வதைக்கேட்டுத் தானாகவேணும்.

லக்ஷ்மி:—எதற்கும் ஒரு எல்லை இல்லையா! எல்லை மீறினால் தொல்லையில்தான் முடியும். என்னால் முடியாது என்றால் முடியாது.

மீனு:—அத்தனை அலக்ஷியமாகவா நான் ஆய்விட்டேன்! உன்னைப்போல் படித்தவளில்லாவிட்டாலும் வயதிலும் அனுபவத்திலும் பெரியவள் என்கிற மதிப்புக்கூட இல்லையா! முடிந்துதானாகவேண்டும்.

லக்ஷ்மி:—இதென்னம்மா தொல்லை. கொஞ்சங்கூட தயவு இல்லையா! என்னால் முடியாத காரியத்தை நான் எப்படிச் செய்வேன்? வீணாகவற்புறுத்துவது சரியில்லை. நான்மாட்டேன்.

மீனு:—நாட்டுக்குச் சுதந்திரம் வந்துவிட்டதுபோல் உனக்கு வீட்டிலும் உன்னிஷ்டம்போல் சுதந்திரம் வந்துவிட்டதாக்கும். ஆகட்டும். உன் கணவன் வரட்டுமே! இந்த நியாயத்தைச் சொல்லிப் பார்க்கலாம், பெரியவர்கள் பெருந்தலை என்கிற மட்டுமரியாதையே இல்லாத துணிச்சலாம். நான் சொல்கிறபடி நீ செய்துதானாகவேண்டும்.

என்று ப்ரமாதமாகச் சண்டை வலுத்து குரல்கள் உறத்துப்போய் விட்டதால் அக்கம்பக்கம் குடி இருப்பவர்கள் இந்தச் சண்டையைக்கேட்டு ஒன்றும் புரியாமல் உள்ளே சென்று, “மீனாக்ஷியம்மா! இதென்ன பெருத்த சண்டையாயிருக்கிறதே! என்ன விசேஷம்? இருவரின் குரல்களும் உச்சஸ்ஸ்தாயிக்கு எட்டுகிறதே!” என்று கேட்டுக்கொண்டே வந்தார்கள்.

அவர்களைக் கண்ட மீனா, “நீங்கள் நியாயத்தைச்சொல்லுங்களேன். நான் பெரியவள் சொல்கிறபடி இவள் கேட்க வேண்டுமா! வேண்டாமா! எதிர்த்துப் பேசுகிறாளே” என்று முடிப்பதற்குள் “மாமி! நீங்கள்தான் சொல்லுங்களேன். என்னால் முடிந்தவரைக்குந்தானே செய்யலாம்!” என்று கத்தினாள் மருமகள்.

விவரம் புரியாத பொதுஜனங்கள் “நீங்கள் இருவரும் எதைப்பற்றி இப்படிச் சண்டை போடுகிறீர்கள் என்றது புரிந்தாலல்லவா நாங்கள் மத்யஸ்தம் செய்வதற்கு? விளக்கிச் சொல்லுங்களேன்” என்றார்கள்.

“என் புரியவில்லை? உடம்பு சரியில்லாது தேறிய இவளுக்கு, கூட ஒரு உருண்டை பாதம்அல்வாவையும் வயிற்றுக் கடுப்புக்கு மிகவும் நல்லதான ஜிலேபியும் ஜீராவும் (பாகும்) கூட இரண்டு வைத்துச் சாப்பிடச் சொன்னால் மாட்டேன் முடியாது என்று எதிர்த்து வாதாடுகிறாளே; இது சரியா! நீங்களே சொல்லுங்கள்” என்று கூறுவதைக் கேட்ட வந்தவர்கள் அடக்கமுடியாமல் விழுந்து விழுந்து சிரித்தார்கள்.

துப்பறியும் வீர சிங்கம் **ராஜாராம் நாயுடு**

வை. மு. கோ. 112-வது நாவல்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி.)

பிறகு ஒரு பெரிய மனிதர்....மிக மிகப் பெரிய செல்வமும், குணமும் நிறைந்த மகானுபாவர் காசியில் பரிச்சயமானார். அவரிடம் நான் குமாஸ்தா வேலைக்கு அமர்ந்து ஒழுங்காக இருக்கிறேன். அவரோடு நான் ஒரு கல்யாண விஷயமாய் இந்த ஊருக்கு வந்தபோது நாடகக் கொட்டகையில் திருடு போனதும் கொலையுங் களவும் எனக்குத் தெரிய வந்தது. என் பழய சரித்திரத்தை எண்ணி என் மனம் புண்ணுகத் தவித்தது.

நான் அஸல் வேற்று மனிதனுகவே மாறிவிட்டதற்கு மகமாயித்தாயி சிறையில் என்னைக் கடாக்ஷித்து விட்டதால் ஒருவராலும், ஏன், உம்மாலும்கூட என்னைக் கண்டு கொள்ள முடியாது. அப்படி உருமாறி விட்டேன்.

என்னதான் மனத்தில் வைராக்கியம் நிறைந்திருப்பினும் என்னைப் பெற்ற தாயின் பாசமும், சகோதர பாசமும் என் அந்தரங்க இதயத்தில் வாட்டி வேலை செய்ததால் மறைமுகமாக என் தாயாரைக் காண வீட்டிற்குச் சென்றேன்.

நாடகத்தில் சேர்ந்து நடிக்கும் பாவி...நகையுடன் ஓடி விட்ட பாவி....என்னுடன் பிறந்த தம்பிதான் என்பதை அறிந்து எரிமலையே என் தலையில் புரண்டுவிட்டது போன்ற அதிர்ச்சி உண்டாகிவிட்டது.

துஷ்ட சகவாஸத்தின் கேடால் அவன் அவர்களுடன் சேர்ந்துகொண்டு இக்காரியத்தைச் செய்துவிட்ட உண்மையை அறிந்தேன். நானும் ஒரு காலத்தில் திருடனுக இருந்ததால், "களவும் கற்று மற" என்று ஔவையார் சொல்லியபடி களவைக் கற்று மறந்திருப்பினும் மீண்டும் அது நினைவில் வந்துவிட்டது.

என் தாயார் என்னை இழந்த துக்கத்தில் பாதி உயிர் போன நிலையிலிருந்தவள் இந்தப் பாவியினுல் முழு உயிரையும் பிரிந்துவிடக்கூடிய நிலைமையில் வந்திருப்பதைக் கண்டு உள்ளம் உருகியது. இதற்காகக்கூட இரண்டு நாட்கள் இந்த ஊரில் தங்கி அந்த நகைகளை அவனிடமிருந்து எவன் பதுக்கிவிட்டானே, அதாவது நாடகத்தில் மயக்கம் கொடுக்கும் கட்டத்தில் உண்மையாகவே என் தம்பிக்கு மயக்கம்

கொடுத்து அவனைத் தூக்கிச் சென்று நகைகளை அபகரித்துக்கொண்டதோடு சில நகைகளை அவனிடமே போட்டுவிட்டு அவனையே குற்றவாளியாக்கிச் சென்றானே அவனை, அந்த இராட்சதர்களைக் கண்டு பிடித்து அந்த நகைகளையும் கொண்டு வந்துவிட்டேன்.

கடினமான பாராங்கல்லையும், பஞ்சுபோலாக்கிப் பக்குவப்படுத்திய பெருமை என்னைக் கைதியாக்கிச் சிறையடைத்த உங்களுக்கே உரியதாகையால் அதற்கு ப்ரதி வந்தனமும் நன்றியும் செலுத்தும் முறையில் இந்த நகைகளைத் தாங்களே கஷ்டப்பட்டுக் கண்டு பிடித்து விட்டதாக ப்ரபலப்படுத்த முன்வந்துள்ளேன். தாங்கள் ரிவார்டு வாங்க வேண்டும். அதை நான் பத்திரிகையில் பார்த்து சந்தோஷப்பட வேண்டும் என்பதால் நேரில் உங்களிடம்கடிதமும் பெட்டியும் கொடுக்க வரப்போகிறேன்.

என்னை மட்டும் இனி நீங்கள் தேடக்கூடாது. இது என்னுடைய ப்ரமாணமான ப்ரார்த்தனை. என் தாயாருக்காக என் தம்பியின் மீது அதிக தண்டனையைச் சுமத்தாமலிருக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்; இன்னொரு முக்ய விஷயம். இத்தனை காரியத்தையும் நான் பல மாறுவேஷங்களுடன் ஜம்புலிங்கம் செய்ததுபோலவே செய்து நானே நடித்து விட்டேன். ஆகையால் தாங்கள் எத்தகைய ச்ரமமும் படவேண்டாம். நகைகள் அப்படியே இருக்கின்றன. ஆகையால் என் தம்பியின் மீது கருணைகாட்டவேண்டும்.

தவிர கொலை விஷயத்தில் எதுவும் எனக்குத் தெரியாது....மிஸ்டர் ஜம்புலிங்கம்! இன்னொரு அதிர்ச்சி! இத்தனையும் கண்டு பிடித்தது நீர்தான் என்று அறிந்து கொண்ட எதிரிகள் உம்மைச் சுட்டுக் கொன்றுவிடத் துணிந்திருப்பதைத் தெரிவித்து விட்டேன். உஷாராகவும் முன் ஜாக்ரதையாகவும் இருக்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

என்னைத் தாங்கள் திருத்தி நல்வாழ்வு அளித்ததற்காக உமக்கு நான் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து விட்டேன்; இதன் மூலம் உமக்கு ஆபத்து வராமல் பார்த்துக் கொள்ள வேண்டியது உமது கடமை. உமது வீட்டிற்கே தீ வைத்து விடவும் எதிரிகள் துணிந்திருக்கிறார்கள்; ஜாக்ரதை! கடவுள் உம்மை ரக்ஷிக்க வேண்டுகிறேன்.

அங்கமுத்து"

என்கிற பெரிய கடிதத்தைப் படித்து முடிப்பதற்குள் ஜம்புலிங்கத்திற்கு இன்னதென்று விவரிக்க முடியாத உணர்ச்சிகள் இதயத்தைக் கப்பிக்கொண்டு விட்டதால் அப்படியே கடிதத்தை மார்மேல் வைத்துக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டார். இதைக் கண்ட பங்கஜத்திற்கு

ஒரே கலக்கமும் அதிர்ச்சியும் உண்டாகி முகம் விகாரப் பட்டது. டாக்டருக்கும் புரியாத புதிராகவே தோன்றிய தால் தம்பித்து நின்று விட்டார்.

18

டாக்டர் வீட்டில் படுத்துள்ள ராஜாராமனுக்கு பயம் என்பது சற்று குறைந்து நிம்மதி உண்டாகியதேயன்றி எதனுலோ தூக்கமே வரவில்லை. அவன் பெற்றோர் களுக்கும் அப்படியே ஒரே கலவரமும் குழப்பமும்தான் பாதித்தது; டாக்டருடைய வீட்டின் லக்ஷணமும் பழமை புதுமை இரண்டுங் கலந்தமுறையில் அலங்கரித்திருப்பதைக் கண்டு ஆநந்தா பூரிப்புடன் பார்த்துக்கொண்டே நின்ருள்.

நாகரீகப் படங்களும் திரைச்சீலைகளும் ப்ரகாசிப்பதே போல் பகவானின் படங்களும் வாசற்படியில் மாவிலை மஞ்சள் குங்குமமும் ஜம்மென்று ஜ்வலிக்கிறது. அதே போல் ட்ராயிங்ரூம் நவநாகரீகமாய் விளங்குவதுபோல் ஸ்வாமியின் பூஜா ரூம் கண்களையும் கருத்துக்களையும் ஒருங்கே கவர்வதாயும் பக்தியை மேன்மேலும் வளர்ப்பதாக இருந் ததைப் பார்த்துப் பரவசத்துடன் நமஸ்கரித்தாள்.

டாக்டரின் மனைவியும் மிக்க மரியாதையுடன் இந்தம் மாளுக்கு வீடு பூராவையும் காட்டியதோடு இத்தனை சிறிய வயதுப் பையனு போலீஸாரின் நன்மதிப்பைப் பெறும் படியான வேலை செய்தான்! பலே கெட்டிக்காரனு இருக்கிருனே! என்று அந்தம்மாள் அந்தப் பையனிடமே நின்று அவனைக் கூர்ந்து கவனித்துச் சந்தோஷப்பட்டாள்.

ராஜாராம் அந்தம்மாளைப் பார்த்தபடி, "ஏம்மாமீ! உங்கள் வீட்டில் குழந்தைகளே இல்லையா அல்லது தூங்கி விட்டார்களா?" என்று குழந்தை உள்ளத்துடனேயே கேட்டான். பாவம் அந்தம்மாளின் முகம் சுண்டிப்போய் வருத்தத்தின் ரேகைகள் படர்ந்து பெருமூச்சு ஒன்று சூடாகவந்தது.

அதைக் கண்ட ஆநந்தா விஷயம் புரியாமல் க்ஷண நேரம் திகைத்துப் போனுள். பிறகு மெல்லச் சமாளித்துக் கொண்டு, ஏம்மா! ஏதோ மாதிரி கவலைப்படுவதுபோலக் காணப்படுகிறீர்களே! குழந்தைகள்....என்று இழுப்பதற் குள் அந்தம்மாள், தீனகுரலில், ஆம்! குழந்தைகள் ஒன்றிரண்டல்ல உலகத்திலிருக்கிற குழந்தைகள் பூராவும் என்னுடைய குழந்தைகள்தான் என்று முடிப்பதற்குள் ஐயோ! பிறக்கவே இல்லையா! அல்லது என்று முடிப் பதற்குள்,

அத்தகைய பயங்கரங்கள் எதுவுமே நேர்ந்து விட வில்லை; என்னுள்ளம் ஒரு குழந்தைக்குத் தவம்செய்து வேண்டியது; ஆனல் என் கணவரின் உள்ளம் அதை அடியோடு வெறுத்தது. குழந்தை குட்டிகள் இருந்தால் தொல்லையும் பந்தமும் அதிகமாகி நாம் உலகத்திற்குக் கனிகரமாக ஸேவை செய்வதற்குத் தடையாகி விடும் ஆகையால் நமக்குக் குழந்தையே வேண்டாம். நீ அந்த ஆசையை விட்டுவிட்டு என் இஷ்டப்படி நீ படித்து என் னுடன் சம உரிமையுடன் ஸேவை செய்து இன்புறும் வழியில் வாழ்க்கைச் சக்கரத்தைத் திருப்ப வேண்டும். கற்புள்ள மங்கையர்களின் கடமை கணவனின் மனங் கோணுதிருப்பதேயாகும். அதன்படி நீயும் அன்புடன் நடக்க வேண்டும் என்று கேட்டார்.

பாரத நாட்டின் பத்தினிப் பெண்களின் மரபில் பிறந் துள்ள பெருமையின்படி நான் உடனே இசைந்து ஸத்திய மும் செய்து கொடுத்துவிட்டேன். அவர் மகா மேதை யாகையால் என் கர்ப்பப்பையையே அப்புறப்படுத்தி என்னைத் தனது தொழிலுக்குச் சமதையாய் உதவும் முறை யில் டாக்டருக்கே படிக்க வைத்தார். நானும் ஒரு லேடி டாக்டர்தான்........

என்ன! தாங்களும் டாக்டரா....என்று ஆனந்தா வியந்தாள். ஆம் அம்மணி! டாக்டர்தான். சில மாதங் களுக்கு முன்பு நான் நோய்வாய்ப்பட்டிருந்து மிகவும் கேவலமான நிலைமைக்கு வந்துவிட்டதால் ஆறு மாத கால மாய் ஓய்விலிருக்கிறேன். இத்தனை மனப்பூர்வமான ஸேவைகளை இருவரும் ஏகமனதாகச்செய்தும் என்னுடைய அந்தராத்மாவில் மட்டும் ஒரு குழந்தை இல்லையே என்று தான் ஏங்குகிறது. அதிலும் இம்மாதிரி மிக்க புத்திசாலிக ளான குழந்தைகளைப் பார்க்கும்போது என்னையறியாது இத்தகைய உணர்ச்சிகள் உண்டாகி விடுகிறது. இந்த ஜென்மத்தில்........

என்று முடிப்பதற்குள் டாக்டர் அங்கு வந்தார். என்ன மதுரம்! இந்த ஜென்மத்தில் என்று கூறி முடிக்கா மல் நிறுத்தி விட்டாய். ராஜாராமனைப்போல் ஒரு செல் வன் நமக்கு இல்லையே என்று வருத்தப்படுகிறாயா மதுரம்! நீ மனம் வைத்து விரும்பினல் ராஜாராமனையே நீ உன் மகன்போல பாவித்துச் சீராட்டலாமே. இவன், வருங் காலத்தில் சூரப்புலியாயும், உதாரணச் சிறுவனாயும் விளங் கப்போகும் அறிகுறி இவனுடைய கண்களைப் பார்க்கும் போதே தெரிகிறது.

அதனல்தான் நானும் இவனுக்குச் சகலவிதத்திலும் சலுகை காட்டினேன். என்னைவிட ஆயிரம் மடங்காக இன்ஸ்பெக்டர் ஜம்புலிங்கம் இவன்மீது உயிரையே வைத்

திருக்கிறார் பாவம். அவருக்கும் ஒரு குழந்தை இல்லை. அவருடைய சோதனை மனிதர்களால் ஏற்பட்டது இல்லையல்லவா! கடவுளாலேயே உண்டாகியதாகையால் அதை யார்மீதும் பழி சுமத்த முடியாது.

மதுரம்! உனக்கு உடல்நிலை சரியாக இல்லாததால் நான் எண்ணியுள்ள இன்னொரு லக்ஷியத்தை இன்னும் ஆரம்பிக்கவில்லை. ராஜாராமனையே அதற்கு முதலாக வைத்து ஆரம்பிக்கவே தீர்மானித்துவிட்டேன். உனக்கும் அதனால் ஒரு உத்ஸாகமும் பொழுதுபோக்கும் உண்டாகும் என்பது என் துணிபு; நம்பிக்கையுமாகும். என்னம்மா! ஏதோ யோசனை செய்கிறீர்கள். உங்கள் மகனைக் கண்டு இப்படி எல்லோரும் அவனை ஸ்வீகரிக்கப் பேசுகிறார்களே என்று கலங்குகிறீர்களா....என்றார்.

ஆனந்தா :—டாக்டர்! நான் அப்படி எதுவும் நினைத்துக் கவலைப்படவில்லை. என் ராஜா யாருடைய பிச்சையாகவாவது வளர்ந்து தீர்க்காயுஸாக இருந்தால் போதும். பெத்த தாயின் வயிறு குளிர்ந்து ஆனந்த அலைமோதிக் கொண்டிருக்கும் அருளைப் பகவான் செய்து ரக்ஷிக்கவே அவனடி தொழுது வேண்டுகிறேன். நாங்கள் எத்தனையோ தவம் செய்து பெற்ற பாலகன் இவன். இவனைப்பற்றி இன்று நீங்களும், ஸ்ரீமான் ஜம்புலிங்கம் அவர்களும் சொல்லும் புகழுரைகளைக் கேட்கக் கேட்க என்னுடைய சந்தோஷம் கரை கடந்து பொங்குகின்றது. வீட்டில் ப்ரதி தினமும் ராஜாராமன்மீது புகாரும், சண்டைகளும் தவிர வேறு நான் கேட்டதே இல்லை. இச்சிறு வயதிலேயே இப்படி இருந்தால் இவனுடைய எதிர்காலத்தில் எப்படி இருப்பான் என்று நாங்கள் இரவு பகல் கவலைப்பட்டுச் சாவதை பகவான்தான் அறிய வேண்டும்.

சில சமயத்தில் இவன் செய்யும் உபத்திரவங்களைப் பொறுக்காமல் அடித்தும் விடுகிறேன். துஷ்டப் பிள்ளைகள் படிக்கும் பள்ளியில் கொண்டு சேர்த்து விடலாமா என்று கூட இவனுடைய தகப்பனார் தீர்மானிப்பதும் உண்டு. தற்சமயம் இங்குள்ள இவனுடைய நிலைமைக்கும் நித்யப்படியில் நாங்கள் கண்டுள்ள நிலைமைக்கும் அஜகஜேந்திரமாக இருப்பதால் எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை. எங்காவது அவன் சுகமாய் க்ஷேமமாய் இருந்து எங்கள் வயிற்றில் பாலை வார்த்தால் போதும் என்ற ஒரே எண்ணம் தான் எனக்குத் தோன்றுகிறது. தாங்கள் சொன்ன விஷயம் எதுவோ! ஒன்றும் எனக்கு விளங்கவில்லை. இவனை இன்ஸ்பெக்டரும், நீங்களும் எப்படியாவது காப்பாற்றி நல்ல உருப்படியாக்கிவிட்டால் போதும் என்று தன் போக்கில் ஆனந்த மிகுதியாகக் கூறினாள்.

டாக்டர்:—அம்மணி! உங்களுடைய பெற்றமனத்தின் பேராவலை நான் கண்ணாடியில் பார்ப்பதுபோல் பார்க்கிறேன். உங்கள் மகனின் எதிர்காலத்தின் சிறப்பைப் பற்றி என்னுடைய அந்தரங்கத்தில் ஏதோ ஒன்று ப்ரமாதமாகப் பேசுகிறது. அதன் காரணம் எனக்கே தெரியவில்லை. அத்தனை நாட்கள் வரையில் நான் இருந்து பார்ப்பேனோ! மாட்டேனோ! தெரியாது. நான் நினைத்துள்ள லக்ஷியமாவது "வாலிபர்களின் ஆரோக்ய சங்கம்" என்ற பெயரில் ஒரு சங்கம் ஆரம்பிக்க வேண்டும். அதில் முக்யமாக மனிதனின் உடல்வலிமையும் நரம்புகளின் பலமும் நன்றாக சொன்னபடி கேட்கும்படி பழகும் முறையை அனுஷ்டானத்தில் கொண்டு வரும்படிச் செய்ய வேண்டும். ஆகார நியதி, மற்ற ஆசாரசீல நியதி இவைகளைச் சரியான முறையில் ஆதிமுதல் பழக்கிக்கொண்டுவிட்டால் பிறகு அவர்களிடம் எத்தகைய வியாதியும் அணுகாது. மருந்துகளின் உபத்திரவத்திற்கும், ஊசிகுத்தலின் தாக்குதலுக்கும் அவன் ஆளாகவே வேண்டாம்.

இதோ பாருங்கள் நானும் ஒரு டாக்டர்தான். ஆனால் என் பெரியோர்கள் என்னை ஒரு சர்க்கஸ்காரனைப் பழக்குவதுபோல் பழக்கி இருப்பதால் என் சரீரத்தை நான் வில்லாய் வளைப்பேன். மூச்சை 'டம்' பிடித்து எகிரி குதிப்பேன்; தண்ணீரில் இக்கரையிலிருந்து அக்கரைக்கு மிதந்து செல்வேன். ஒரு சிறிய இரும்பு வளையத்தில் நுழைந்து வெளிவருவேன்; சிறிய சந்தின் இடுக்கில் புகுந்து புறப்படுவேன். என் சரீரத்திலுள்ள எலும்புகளைப் பஞ்சுபோல் நான் சொன்னபடி கேட்டு வளையும்படிக்குச் செய்வேன்.

இத்தகைய ஸ்வாதீனமும் திறமையும் எல்லோரிடமும் பரவி வளரவேண்டும். இத்தகையவர்களிடம் ரோகமும் அணுகாது. எந்த நிமிஷமும் பயமின்றி எதிரிகளை ஜெயிக்கலாம். எத்தனையோ விதத்தில் நன்மைகளை அடையலாம். இந்த மாதிரி பயிர்ச்சி நிலயத்தை நிறுவி ஆண்கள், பெண்கள் இருவருக்கும் நல்ல பயிர்ச்சிகளை அளிக்க ஆசைப்படுகிறேன். ராஜாவைப் பார்த்த பிறகு என்னுடைய ஆவல் இன்னும் அதிகமாக ஊர்ஜிதமாகிறது. இன்ஸ்பெக்டரும் நானும் சேர்ந்து கூடிய சீக்கிரத்திலேயே இந்த நிலயத்தை ஏற்படுத்த வேண்டும்........என்ன ராஜா! நீ நல்ல உடல் பயிர்ச்சி செய்வாயா? என்றார்.

JAGANMOHINI, owned and edited by V. M. KOTHAI-NAYAKIAMMAL is printed & published by V. M. PARTHASARATHY at the JaganMohini Press, 26, Car St., Triplicane, Madras. 5.

183194

அரிய தமிழ் விருந்து (தொடர்ச்சி)

ராணி சீலாவதி

வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L
நான்காவது நவீனம் - ரூ-1/-

1. உபன்யாசமும் உதாசீனமும் 2 பேய்க்குக் கள் வார்த்த கதைதான் 3 வாக்கு பலித்தது—விபரீத யாத்திரையே 4 நிந்தனையும் நிபந்தனையும். 5. உவமையும் உவகையும் 6 வாழ்க்கைத் தோட்டத்தில் மலர்ந்த இதழ். 7. மடமையும் கடமையும்—சூழ்ச்சியின் வீழ்ச்சி 8 இனம் இனத்தைச் சேரும்—தூபமும் தாபமும் 9 விதையும் அறுவடையும் 10 தியாகச் சிகரம்—கடமையின் புண்ணிய வடிவம் 11. சீலாவதியும் சிலாவதியும் 12 ராஜரிஷியின் இதய கீதம்.

பெண்மணிக்கனல்

சரித்திரஜோதி

வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L
ஐந்தாவது சித்திரம் ரூ 1/-

சரித்திரஜோதி—1 ஸ்தலமும் காலமும் 2 அஸ்திவாரம் 3 கபடநாடகமும் சூழ்ச்சிமேல்சூழ்ச்சியும் 4 இறுதி மொழியும் உறுதிப்பாடும் 5 சிங்கமும் புலியும் 6 வீழ்ச்சியும் மீட்சியும்

"கண்முனே காட்டினுள் பெண்மணிக்கனலை, பெண் சக்தியின் சிறப்பை, குன்ரு உறுதியின் எல்லையை, மனமுண்டானல் மார்க்கமுண்டு என்ற உண்மையை! இந்திய சமஸ்தானங்களுள் பலவிதத்திலும் முன்னணியில் நிற்கும் மேன்மையை இன்று மைசூர் பெற்றிருப்பதற்கு உண்மையான அஸ்திவாரமிட்டவள் மாதாசி லக்ஷ்மி அம்மணியே!"

இருளில் ஒளி

வை. மு. ஸ்ரீநிவாஸன், M.A.B.L
ஆருவது சுடர் ரூ. 1.4.0

முதல் பாகம்—1 இருளில் ஒளி 2 திருமகளின் திருவருள் 3 கனியும் கன்னியும் 4- உள்ளும் புறமும் 5 உளளொளி 6. மனநிம்மதி 7 ஒளியும் ஒலியும்

இரண்டாம் பாகம்—1 ஒருபக்தனின சந்தேகநிவ்ருத்தி 2 கோலும் கொடியும் 3 லகுவான உபாயம் 4. முடிவும் நடுவும் 5 தெய்விக இசையின் அத்புத சக்தி 6. மலையில் மலை 7 கோபியரும் உத்தவரும்

" அவள்
ரூபவதி

ஆனால் ....
கர்ப்பாசய நோயுற்று,
ஆரோக்கியமிழந்து
அவள் வாழ்க்கையில்
சுகத்தையோ ஒரு
தாயின் இன்பத்தையோ
அடையமுடியாது.

அருணா
கர்ப்பாசயரோக நிவாரணி

பெண்களின் தனிப்பட்ட நோய்களைத்தீர்க்கும்.
ஆரோக்யமுள்ள தாயாவதற்கு உதவும்.

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட், மதராஸ் 17.

வை. மு. கோ. நாவல்கள்

ரூ. 4-8
வைதேகி (2 பாகம்)
ரூ. 4.
சாந்தியின் சிகரம்
ரூ. 3.
நிர்மலநீரோடை
ரூ. 2-8
உணர்ச்சி வெள்ளம்
அமுதமொழி (கினேஸ்)
மலர்ந்த இதழ்
ரூ. 2-4
நூ[illegible]நீபம்
ரூ. 2.
சந்தோஷ மலர்
கருணாலயம்
வாத்ஸ[illegible]யம்
மதுர [illegible]தம்
அமுத[illegible]ழி (சாதா)
ஆசைபரிவாகம்
வெளுத்த வானம்
தெய்வீக ஒளி
ஜீவநாடி
பாதாஞ்சலி
புஷ்ப[illegible]லம்
குணக் குன்று
ரூ. 1-12
அனாதைப்பெண்

புகழ்மாலை
கலாநிலயம்
சிலாசாசனம்
வீராங்கனை
அமைதியின்
அஸ்திவாரம்
கடமையின் எல்லை
ரூ. 1-8
பிரதிபலன்
பவித்திரப்பதுமை
ஓவியப் பரிசு
இசைப்புயல்
காலக்கண்ணாடி
ஜெயபேரிகை
நம்பிக்கைப்பாலம்
சுதந்திரப் பறவை
ரூ. 1-4
கோபால ரத்னம்
மகிழ்ச்சி உதயம்
க்ருபாமந்திர்
புதுமைக்கோயில்
ரூ. 1-2
படகோட்டி
அபராதி
ரூ. 1.
நளினசேகரன்
மாலதி

வத்ஸகுமார்
ப்ரார்த்தனை
பிரதிக்ஞை
பெண் தர்மம்
உண்மைச் சித்திரம்
மனத்தாமரை
தபால் விநோதம்
இனிய முரசு
ஆண்டவனின் அருள்
இந்திரமோஹனா

அணா. 12.
பக்ஷமாலிகா
ப்ரேமாச்ரமம்
நியாயமழை
அருணோதயம்
மனச்சாட்சி
குலதனம்
கருணை உள்ளம்
அணா. [illegible]
உருத்த இதயம்
கான கலா
தூய உள்ளம்
ஸௌபாக்யவதி
ப்ரபஞ்சலீலை
வெற்றிப்பரிசு
ரோஜா மலர்
தைரியலக்ஷ்மி